பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

மரம் : 40 கனி : 2 பிப்ரவரி - 2019

சகோ. மோகன் சி. லாசரஸ்



பயப்படாதிர்கள்,

## ஜெயமோ கர்த்தரால் வரும்!

நீதிமொழிகள் 21:31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் சகோதரனிடமிருந்து...

*இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில்,*
*உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!*

புது வருடத்தில் ஒரு மாதத்தைக் கடந்து, 2வது மாதத்திற்குள் வந்து விட்டோம்! கடந்த மாதம் முழுவதும் நம்மைக் காத்து நடத்திய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! **"காரிய சித்தியோ கர்த்தரால் வரும்."** (நீதி. 16:33) என்று, கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேற **ஜெபிக்கிறேன்!** நீங்களும் **தினமும் இந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி ஜெபியுங்கள்!** அப்பொழுது உங்கள் காரியங்கள் எல்லாம் வாய்ப்பதைக் காண்பீர்கள்.

உங்கள் ஜெபத்தினால், கடந்த மாத ஊழியங்களை எல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்தார். கடந்த (2019) ஜன. 4ம் தேதி கன்னியாகுமரியில் நடைபெற்ற 12 மணி நேர எழுப்புதல் முழு இரவு ஜெபத்தில், சுமார் 75 ஆயிரத்திலிருந்து **1,00,000** பேர் கலந்து கொண்டு, தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

ஜன. 14, 15,16 தேதிகளில், தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற 3 நாட்கள் திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில், சுமார் **13,600** தேவ பிள்ளைகள் பங்கு பெற்று, கர்த்தர் வெளிப்படுத்திய காரியங்களுக்காக ஜெபித்தார்கள்.

அதைத் தொடர்ந்து, ஜன. 19ம் தேதி தேவனுடைய கூடாரத்திலும் தமிழ்நாட்டில் உள்ள 300 தாலுகாக்களிலும் நடைபெற்ற 12 மணி நேர உபவாச ஜெபத்தில் திரளான தேவ பிள்ளைகள் கூடி வந்து ஜெபித்தார்கள். இந்தியாவின் 29 மாநிலங்களிலும் 12 மணி நேர உபவாச ஜெபம் நடைபெற்றது. இந்தியாவின் எழுப்புதலுக்காகவும், வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது.

ஏப்ரல் மாதத்தில் **கல்முனையிலும், யாழ்ப்பாணத்திலும்** நடைபெறவிருக்கிற ஊழியங்களுக்காக **ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!**

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு பட்டணத்தில்** நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.**

செவ்வாய் கிழமைதோறும் **திருகோணமலையில்** தேசத்திற்காக ஜெபிக்க **காலை 9:30 - மதியம் 2:00** மணிவரை சிறப்பு ஜெபம் நடைபெறுகிறது. கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

தேவனுடைய கூடாரத்தை சீக்கிரமாகக் கட்டி முடிக்க, கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற **ஜெபியுங்கள்.** இந்த 2019வது ஆண்டில் சிறு பிள்ளைகள், இளம் வாலிபர்கள் (Teens) மற்றும் வாலிபர்களுக்கென்று தனித்தனியாக ஜெப முகாம்களை நடத்த, கர்த்தர் ஆலோசனை கொடுத்திருக்கிறார். இந்த **தேவத் திட்டம் நிறைவேற ஜெபியுங்கள்.**

கடந்த வருடமெல்லாம் உங்கள் ஜெபத்தினாலும், தியாகமான காணிக்கையினாலும் இந்த ஊழியத்தைத் தாங்கி வந்தீர்கள். **இந்த ஊழியம் உங்களுடையது!** நீங்கள் இந்த ஊழியத்தில் பங்காளர்களாக இருக்கிறீர்கள். நாம் சேர்ந்து தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டி வருகிறோம். உங்களுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். இந்த வருடமும் நாம் சேர்ந்து தேவ திட்டங்களை நிறைவேற்றுவோம்.

**எனக்காக,** நம் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியக் **குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.** நாங்களும் உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக **ஜெபிக்கிறோம்.**

கிருபை உங்களோடிருப்பதாக!



உங்கள் சகோதரன்,
Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயப்படாதிர்கள்.

# ஜெயமோ கர்த்தரால் வரும்!

நீதிமொழிகள் 21:31

ஒரு சமயம், ஒரு தகப்பனார் என்னிடத்தில் ஜெபிக்க வந்தார். அவருடைய மகள், தன் சரீரத்திலே பெலவீனப்பட்டவள். அந்த நிலைமையில், பத்தாவது வகுப்பு அரசாங்கத் தேர்வுக்கு அவள் ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்தத் தகப்பனார்; "என் மகள் சரீரத்தில் பெலவீனப்பட்டிருக்கிறபடியினால், அவளை படிப்பில் நான் கட்டாயப்படுத்தவில்லை. அவள் படிக்கிற பள்ளிக்கூடத்திலும் அவளுடைய பெலவீனத்தைப் புரிந்து கொண்டு, இதுவரை அவளைப் பாஸாக்கி விட்டார்கள்.

ஆனால், இப்பொழுது அரசாங்கத் தேர்வு! அவள் மீது இரக்கப்பட்டு, யாரும் அவளைப் பாஸாக்க மாட்டார்கள். இதுவரை நடந்த காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் அவள் வெற்றி பெறவே இல்லை. இந்த அரசாங்கத் தேர்விலும் அவள் வெற்றி பெற முடியாது என்று எனக்குத் தெரியும்.

என்றாலும், இயேசு அவளுக்கு ஒரு அற்புதம் செய்ய வேண்டும். இயேசு அற்புதம் செய்தால்தான், அவள் வெற்றி பெற முடியும். இதற்கு மேல் அவளால் படிக்க முடியாது. பத்தாவது வகுப்பாவது வெற்றி பெற்ற சந்தோஷம் அவளுக்கு இருக்கும்.

கர்த்தர் ஒரு அற்புதம் செய்யும்படி என் மகளுக்காக ஜெபிக்க வேண்டும்." என்று என்னிடத்தில் வேண்டிக் கொண்டார். அந்தத் தகப்பனாரின் இருதய வாஞ்சையை அறிந்து, நானும் அவரோடு சேர்ந்து, அந்த மகளின் வெற்றிக்காக ஜெபித்தேன்.

சில நாட்கள் கழித்து, அந்தத் தகப்பனார் மறுபடியும் என்னைப் பார்க்க வந்தார். "என் மகள் வெற்றி பெற்று விட்டாள். இது, இயேசு செய்த அற்புதம்தான்! என் மகள், அவளாகப் படித்து வெற்றி பெற முடியாது என்று எனக்குத் தெரியும். இது இயேசு செய்த அற்புதமேதான்! அவருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்." என்றார். கர்த்தருக்கு நன்றி சொல்லி ஜெபித்தோம். பாருங்கள், முடியாததை முடியச் செய்பவர்தான் இயேசு கிறிஸ்து! "உங்களுக்கு ஜெயம் வரும்!" என்று அவர் வாக்குக் கொடுக்கிறார்.

உங்கள் படிப்பில், வேலையில், தொழிலில், வாழ்க்கையில், ஊழியத்தில்...என்று, எந்தக் காரியத்தில் ஜெயம் வேண்டும்? என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ; அந்தக் காரியத்தில் **உங்களுக்கு ஜெயம் வரும்.**

**'கோலியாத்'** என்ற ஒரு ராட்சதனை ஜெயிப்பதற்கு, **'தாவீது'** என்ற ஒரு இளம் வாலிபனுக்கு கர்த்தர் உதவி செய்த சம்பவம், பரிசுத்த வேதாகமத்தில் **1 சாமுவேல் 17ம் அதிகாரத்தில்** எழுதப்பட்டிருக்கிறது.

அன்று, தாவீதுக்கு ஜெயம் கொடுத்த கர்த்தர், இன்று **உங்களுக்கும் ஜெயம் தருவார்.** தாவீதுக்கு கர்த்தர் எப்படி ஜெயம் கொடுத்தார்? என்பதை நாம் அறிந்து கொண்டால், நாமும் சுலபமாக ஜெயம் எடுக்கலாம்.

'கோலியாத்' என்கிற ஒரு பெலிஸ்தன், சுமார் 10 அடி உயரமுள்ள ஒரு ராட்சதன்! இஸ்ரவேலின் சேனையை அவன் பயமுறுத்திக் கொண்டிருந்தான். அவனுடைய உருவத்தையும், அவன் பேசிய ஏளனமான வார்த்தைகளையும் கேட்டு, இஸ்ரவேலின் ராஜாவும், படை வீரர்களும் பயந்து கொண்டிருந்தார்கள். அவனோடு யுத்தம் பண்ண யாரும் முன்வரவில்லை. அந்தச் சமயத்தில்தான், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இளம் வாலிபனாகிய தாவீது, "நான் போய், அந்த ராட்சதனோடு யுத்தம் பண்ணுகிறேன்." என்றார்.

தாவீதுக்கோ யுத்தத்தில் பழக்கம் கிடையாது! போர் வீரர்களின் உடையை உடுத்திக் கொண்டு, நடக்கக் கூடத் தெரியவில்லை! பட்டயத்தை எடுத்து சண்டை போடத் தெரியாது! ஆனால், தைரியமாக அந்த ராட்சதனை தாவீது சந்தித்தார்! மேய்ப்பர்கள் வைத்திருக்கும் கவண் கல்லை வைத்து, அந்த ராட்சதனை ஜெயித்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயப்படாதீர்கள்!

தாவீது, அந்த ராட்சதனின் உருவத்தைக் கண்டு பயப்படவில்லை! அவன் பேசிய, பயப்படுத்துகிற வார்த்தைகளைக் கேட்டு பயப்படவில்லை! "எனக்கு மற்ற வீரர்களைப்போல் வாளை எடுத்து சண்டை போடத் தெரியாதே!" என்றும் பயப்படவில்லை! "நான் சிறுவனாயிருக்கிறேனே! இந்தப் பெரிய ராட்சதனை என்னால் எப்படி ஜெயிக்க முடியும்?" என்றும் பயப்படவில்லை! தாவீது, தைரியமாக அந்த ராட்சதனை நேருக்கு நேர் சந்தித்து, யுத்தம் செய்தார்.

**கர்த்தர் ஜெயம் கொடுத்தார்!**

நீங்களும் **பரீட்சையைக் கண்டு பயப்படாதீர்கள்!** சூழ்நிலையைக் கண்டு **பயப்படாதீர்கள்!** பிரச்சனைகள், தேவைகளைக் கண்டு **பயப்படாதீர்கள்!** தைரியமாக **பிரச்சனைகளை எதிர் கொள்ளுங்கள்.** அப்பொழுது, நீங்கள் **ஜெயம் பெறுவீர்கள்!**

நீங்கள் எழுதப் போகும் அரசாங்கத் தேர்வு, நீங்கள் சந்திக்கப் போகும் நேர்முகத் தேர்வு, உங்களுக்கு வந்திருக்கும் பிரச்சனைகள், உங்களுக்கு ஒரு கோலியாத்தைப் போல தெரியலாம்!

என்றாலும், **பயப்படாதீர்கள்!** தைரியமாக அந்தக் கோலியாத்தைச் சந்தியுங்கள்! **பயம்தான், அனேகருடைய தோல்விக்குக் காரணமாகி விடுகிறது!** நாம் பயப்படும்போது, சாத்தான் அதிலே செயல்பட முடியும். ஆகவேதான் கர்த்தர், **'பயப்படாதே!' 'பயப்படாதீர்கள்!'** என்று, பரிசுத்த வேதாகமம் முழுவதும் சொல்லி வைத்திருக்கிறார். நீங்கள் பயப்படும்போது, சாத்தான் உங்களை ஜெயித்து விட முடியும்.

ஆகவே, **"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;"** (ஏசாயா 41:10) என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார். "கர்த்தராகிய இயேசு என்னுடனே இருக்கிறார். நான் பயப்பட மாட்டேன்." என்று தைரியமாகச் சொல்லுங்கள்.




**தைரியமாக நீங்கள் பரீட்சை எழுத வேண்டும்!** தைரியமாக நீங்கள் பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டும்! தைரியமாக நீங்கள் சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும்! அப்பொழுது, கர்த்தராகிய இயேசு உங்களுக்கு வெற்றியைத் தருவார். சில பெற்றோர்களே, தங்கள் பிள்ளைகளைப் பயப்படுத்தி, தேர்வில் அவர்களுக்குத் தோல்வியை உண்டாக்கி விடுவார்கள். "இது அரசாங்கத் தேர்வு! இதில் வெற்றி பெற்றால்தான், உனக்கு எதிர்காலமே இருக்கிறது! இதில் தோல்வியடைந்தால், உன் வாழ்க்கையே போய் விடும்!" என்று பிள்ளைகளுக்குள்ளே பயத்தை விதைத்து விடுகிறார்கள். இதனால் பிள்ளைகள் பயமடைந்து, படிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

சில ஆசிரியர்கள் கூட பிள்ளைகளைப் பயப்படுத்தி, தோல்விக்கு நேராக அவர்களை நடத்தி விடுகிறார்கள். "நீ வாங்குகிற மார்க்குக்கு நீயெல்லாம் எங்கே தேரப் போகிறாய்? நீ பரீட்சை எழுதி தோற்றுப் போகிறதை விட, எழுதாமலிருப்பதே நல்லது! உன்னையெல்லாம் உங்க அப்பா-அம்மா படிக்க வைக்கிறாங்க பாரு! நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு!" என்று, இப்படி பல வார்த்தைகளைச் சொல்லித் திட்டுவதால், பயமடைந்து, தேர்வில் தோற்றுப் போகிற பிள்ளைகளும் உண்டு.

ஆனால், கர்த்தர் என்ன சொல்வார்? "இதுவரை நீ தோல்வி அடைந்திருக்கலாம்! என்றாலும், என்னால் உனக்கு ஜெயம் தர முடியும்! உன்னால் முடிந்த அளவு பிரயாசப்பட்டுப் படி. நான் உனக்கு ஞானம் தருவேன்! நான் உனக்கு ஞாபக சக்தி தருவேன்! நான் உனக்கு உதவி செய்வேன்! நான் உனக்கு ஜெயம் தருவேன்!" என்றுதான் சொல்வார்.

**தயவு செய்து பிள்ளைகளை பயப்படுத்தாதீர்கள்.** தேர்வின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்களிடத்தில் சொல்லி, அவர்களைப் படிக்க உற்சாகப்படுத்துங்கள். "படித்து, உன்னால் அதிக மார்க் எடுக்க முடியும்!" என்கிற நம்பிக்கையான வார்த்தைகளை அவர்களிடத்தில் சொல்லுங்கள்.

ஒரு சமயம், ஒரு பட்டணத்திற்கு நாங்கள் ஊழியத்திற்குச் சென்றிருந்தபோது, கூட்டத்தின் முடிவில் ஒரு தம்பி என் மனைவியினிடத்தில் வந்து:

"நான் பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கிறேன். இதுவரை நடைபெற்ற காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளிலெல்லாம் நான் கணக்குப் பாடத்தில் வெற்றி பெற்றதே இல்லை. எனக்கு, கணக்குப் பாடம் கடினமாக இருக்கிறது. இப்பொழுது அரசாங்கத் தேர்வு வந்து விட்டது. 'நீ வெற்றி பெற மாட்டாய்' என்று எல்லோரும் சொல்கிறார்கள். எனக்கு, கணக்குப் பாடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து பயமாக இருக்கிறது, எனக்காக ஜெபிப்பீர்களா?" என்று சோகத்தோடு கேட்டான்.

என் மனைவி அவனை தைரியப்படுத்தி, "இயேசு உனக்கு ஞானம் தருவார். கணக்குப் பாடத்தில் வெற்றி தருவார், பயப்படாதே! உன்னால் முடிந்த அளவு படித்து, பரீட்சை எழுது. இயேசு உன்னோடு இருக்கிறார். தினமும் வேதாகமத்தை வாசித்து, ஜெபித்து விட்டுப் படி, நீ ஜெயம் பெறுவாய்." என்று சொல்லி, அவனை ஜெபித்து அனுப்பினாள்.

இரண்டு வருடங்கள் கழித்து, மீண்டும் நாங்கள் அந்தப் பட்டணத்திற்கு ஊழியத்திற்குச் சென்றிருந்தபோது, அதே தம்பி வந்து, என் மனைவியைச் சந்தித்து: "இரண்டு வருடங்களுக்கு முன், என் +2 பரீட்சைக்காக உங்களிடம் வந்து ஜெபித்தேன். நீங்கள் என்னை தைரியப்படுத்தி, ஜெபித்து அனுப்பினீர்கள். அதன் பிறகு, நான் உற்சாகமாகப் படித்து, ஜெபித்து, பரீட்சை எழுதினேன். கணக்குப் பாடத்தில் கர்த்தர் எனக்கு அதிக மார்க் கொடுத்தார்.

இப்பொழுது பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கிறேன். நான் வெற்றி பெறக் காரணம், நீங்கள்தான்! எல்லோரும் என்னைப் பயப்படுத்திக் கொண்டிருந்தபோது, நீங்கள்தான் என்னை தைரியப்படுத்தி, ஜெபித்து உற்சாகப்படுத்தினீர்கள். அதனால்தான் நான் தைரியத்தோடு படித்து வெற்றி பெற்றேன்." என்று மகிழ்ச்சியோடு சொன்னான்.

ஆகவே, **தயவு செய்து யாரையும் பயப்படுத்தாதீர்கள்.** பயத்தைக் கொண்டு வருகிறவன் சாத்தான்! பயத்திலே கிரியை செய்கிறவன் சாத்தான்! நம்மைப் பயப்படுத்தி, தோல்விக்கு நேராக நம்மை நடத்துகிறவன் சாத்தான்! உங்கள் காரியம் **எதுவானாலும் பயப்படாதீர்கள்! இயேசுவால் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றும் உங்களுக்கு வரப் போவதில்லை. அவர் எல்லாக் காரியத்திலும் உங்களுக்கு ஜெயம் தருவார்.** பயத்தைக் கொண்டு வருகிற சாத்தானை கடிந்து கொள்ளுங்கள். "என் கர்த்தராகிய இயேசு எனக்கு ஜெயம் தருவார்." என்று சொல்லுங்கள். ஜெயம் பெறுவீர்கள்!

தாவீது, தைரியமாக கோலியாத்தைச் சந்தித்து ஜெயம் பெற்றார். நீங்களும் தைரியமாக, தேர்வை, பிரச்சனைகளை, போராட்டங்களைச் சந்தியுங்கள். தாவீது எப்படி ஜெயம் பெற்றார்? நாம் எப்படி ஜெயிக்க முடியும்?

# முந்தின வெற்றிகளை நினைத்துக் கொள்ளுங்கள்!

தாவீது, ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு இளம் வாலிபன். கோலியாத் யுத்தத்தில் பயிற்சி பெற்ற ஒரு பெரிய ராட்சதன். "நீ போய் அவனோடு யுத்தம் பண்ணி ஜெயிக்க முடியாது." என்று தாவீதுக்குச் சொல்லப்பட்டபோது, "...என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன்...என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்;..." (1 சாமு. 17:34-37).

தாவீது, தனக்கு முன்பாக இருந்த பிரச்சனையை (கோலியாத்தை) நோக்கிப் பார்க்காதபடி, தனக்கு கர்த்தர் கொடுத்த முந்தின வெற்றிகளைச் சிந்தித்துப் பார்த்தார். ஆகவே தாவீது, தைரியத்தோடு பிரச்சனையை எதிர்கொண்டார்.

ஒரு சமயம் ஒரு தாயார், +2 படித்துக் கொண்டிருந்த தன் மகளை, என்னிடத்தில் ஜெபிக்க அழைத்துக் கொண்டு வந்தார்கள். "இந்த ஆண்டு இவள் +2 தேர்வு எழுதப் போகிறாள். இவள் எடுக்கிற மார்க்கில்தான், இவளுடைய எதிர்காலமே



இருக்கிறது. இவளுக்காக ஜெபியுங்கள்." என்றார்கள். நான் அந்த மகளைப் பார்த்தேன். தாய் சொன்னதைக் கேட்ட அவளுக்குள், ஒரு பய உணர்வு இருப்பதைப் பார்த்தேன்.

"+1 வரை நீ வெற்றி பெற்றுத்தானே, +2 படிக்க வந்தாய்?" என்றேன். "ஆம்." என்றாள். "+1 வரை வெற்றி கொடுத்த கர்த்தர், இந்த +2 பரீட்சையிலும் உனக்கு ஜெயம் தருவார்!" என்றேன்.

தன் முந்தின வெற்றிகளை நினைத்தவுடன், அவளுக்குள் ஒரு மகிழ்ச்சி உண்டானதை என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க முடிந்தது. "உனக்கு இதுவரை உன் படிப்பில் வெற்றி கொடுத்த கர்த்தர், இந்த வருடத்திலும் உனக்கு வெற்றி தருவார்!" என்று சொல்லி ஜெபித்தபோது, அவள் மகிழ்ச்சியோடு சென்றாள். ஜெயமும் பெற்றாள்.

கர்த்தர் உங்களை நடத்தி வந்த விதத்தை எண்ணிப் பாருங்கள். உங்களுக்கு அவர் கொடுத்த வெற்றிகளை, அவர் செய்த அற்புதங்களை நினைத்துப் பாருங்கள்.

சில சமயங்களில் ஊழியத்தின் தேவைகள், ஊழியத்தில் வரும் போராட்டங்கள் என்னைக் கலங்கப் பண்ணும். நான் தேவ சமூகத்தில் போய் அதற்காக ஜெபிக்கும்போது, கர்த்தர் அதற்கு முன் செய்த அற்புதங்களை எனக்கு ஞாபகப்படுத்தி, "அந்தத் தேவைகளைச் சந்தித்த நான், இந்தத் தேவைகளை என்னால் சந்திக்க முடியாதா? அந்தப் போராட்டத்தில் உனக்கு வெற்றியைக் கொடுத்த நான், இந்தப் போராட்டத்திலும் என்னால் உனக்கு வெற்றியைக் கொடுக்க முடியாதா?" என்று கேட்பார்.

உடனே என் கலக்கங்கள் மாறி, ஒரு சந்தோஷம் உள்ளத்தில் உண்டாகும். **"கர்த்தர் இந்தக் காரியத்திலும் அற்புதம் செய்வார்!"** என்கிற ஒரு நிச்சயம் எனக்கு உண்டாகும்.

இப்படியாக, அனேக அற்புதங்களை நான் கண்டிருக்கிறேன். உங்கள் வாழ்க்கையிலும், இதுவரை கர்த்தர் செய்த அற்புதங்களை நினைத்துப் பாருங்கள், உங்கள் கலக்கங்கள், பயங்கள் மாறும். **நீங்களும் வெற்றி பெறுவீர்கள்!**

# கர்த்தரைச் சார்ந்து கொள்ளுங்கள்!

**தாவீது, அந்தக் கோலியாத்தோடு யுத்தம் செய்யச் சென்றபோது, தன் கையில் மேய்ப்பனுக்குரிய தடியோடும்,கவணோடும் அவனண்டையிலே போனார். கோலியாத்தோ, யுத்த வீரனுக்குரிய உடைகளை அணிந்து, யுத்த ஆயுதங்களை தன் கைகளில் பிடித்தவனாக நின்றான்.**

அந்த ராட்சதன் தாவீதைப் பார்த்து, **"நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி, அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்தான்."**

**"அதற்குத் தாவீது: பெலிஸ்தனை (கோலியாத்தை) நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்."** (1 சாமுவேல் 17:43,45) என்றார்.

தாவீது, அந்த ராட்சதனோடு யுத்தத்திற்குச் சென்றபோது, தன் திறமைகளையோ, தன் முன் அனுபவங்களையோ சார்ந்து கொள்ளாமல், தன் கர்த்தரை மாத்திரமே சார்ந்து கொண்டார்.



நீங்களும், "எனக்கு ஞானம் இருக்கிறது! நல்ல ஞாபக சக்தி இருக்கிறது!

ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் படிக்கிறேன்! நான்தான் வகுப்பிலேயே முதல் மார்க் எடுக்கிறேன்...!" என்று, உங்கள் திறமைகளையும், பிரயாசங்களையும் சார்ந்து கொள்ளாமல், "நான் படிக்கிறேன், பிரயாசப்படுகிறேன். என்றாலும், **"ஜெயமோ எனக்குக் கர்த்தரால் வரும்!"** என்று, **கர்த்தரையே சார்ந்து கொள்ளுங்கள்.**

ஒரு சமயம், தேர்வில் தோல்வியடைந்த ஒரு மகள், வேதனையோடு எனக்கு இப்படியாக ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.

"எந்தவொரு பாடத்திலும் நான் இதுவரை தோல்வியடைந்ததே இல்லை. இரவு நேரங்களில் வெகு நேரம் விழித்திருந்து, கடினமாகத்தான் படித்தேன். ஜெபமெல்லாம் செய்தேன். என்றாலும், நான் தோல்வியடைந்து விட்டேன். இதை என்னால் நம்பவே முடியவில்லை. "நீ நன்றாகப் படிக்கிற பிள்ளைதானே! நீ எப்படி தோல்வியடைந்தாய்?" என்று, எல்லோரும் என்னிடத்தில் கேட்கும்போது, எனக்கு வெட்கமாக இருக்கிறது." என்று.

நான் அந்த மகளுக்காக ஜெபித்தபோது, அவள் கர்த்தரை முழுமையாகச் சார்ந்து கொள்ளாதபடி, வழக்கத்தின்படி ஜெபித்தாள். தன் திறமையை, படிப்பை நம்பி, "நான் வெற்றி பெறுவேன்!" என்று பெருமையாக எண்ணினாள். அதனால்தான் அவள் தோல்வியடைந்திருக்கிறாள் என்பதை அறிந்து, ஜெபத்தோடு அவளுக்குப் பதில் கடிதம் எழுதினேன்.

அவள் அதை ஒத்துக் கொண்டாள். தன் தவறை உணர்ந்து மனந்திரும்பினாள். அதற்குப் பிறகு, அவள் படிக்கும்போதும், பரீட்சை எழுதும்போதும் கர்த்தரையே சார்ந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் அவள் தேர்வு எழுதியபோது, எதிர்பாராத அளவு அதிக மார்க்குகள் எடுத்து வெற்றி பெற்றாள். "இப்பொழுது நான் கர்த்தரைச் சார்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டேன்." என்று எனக்குக் கடிதம் எழுதினாள்.

இன்று உங்கள் வெற்றிக்காக, ஆசீர்வாதத்திற்காக, உங்களை அல்லது உங்கள் திறமைகளை நீங்கள் சார்ந்து நிற்கிறீர்களா? அல்லது, கர்த்தரைச் சார்ந்து நிற்கிறீர்களா?

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."** (பிலி. 4:13) என்று, இயேசு கிறிஸ்துவை மாத்திரம் நீங்கள் முழுமையாகச் சார்ந்து கொள்ளுங்கள்.

"கர்த்தர், எனக்குப் படிக்க பெலன் தருவார்! பரீட்சை எழுத எனக்குப் பெலன் தருவார்! எனக்கு வெற்றியைத் தருவார்! அவர் எனக்கு ஜெயம் தருவார்!" என்று **அவரையே சார்ந்து கொள்ளுங்கள், ஜெயம் பெறுவீர்கள்!**

# விசுவாசியுங்கள்!

**தாவீது, அந்த ராட்சதனுக்கு முன்பாக யுத்தத்திற்காக நின்றபோது,"என்னால் முடிந்த அளவு போராடிப் பார்க்கிறேன். வெற்றி பெற்றால் சரி, இல்லையென்றால் சாகிறேன்."என்று சொல்லவில்லை.**

தாவீது, அந்த கோலியாத்தைப் பார்த்து: **"இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்."** (1 சாமு. 17:46) என்றார்.

"கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார்!" அதாவது, "கர்த்தர் எனக்கு ஜெயம் கொடுப்பார்!" என்று விசுவாசத்தோடு தாவீது சொன்னார். தாவீதினுடைய அந்த விசுவாசத்தைக் கர்த்தர் கனப்படுத்தி, அவருக்கு வெற்றியைக் கொடுத்தார்.

"நான் இந்தத் தேர்வில் வெற்றி பெறுவேன்! கர்த்தர் எனக்கு விசேஷித்த வெற்றியைத் தருவார்! நான் விரும்புகிற கல்லூரியில் மேற்படிப்புப் படிப்பேன்." என்று விசுவாசத்தோடு சொல்லுங்கள். உங்களுக்கு வந்திருக்கிற பிரச்சனைகள், போராட்டங்கள் எதுவானாலும், "இயேசு கிறிஸ்து எனக்கு வெற்றி தருவார்! இந்தப் போராட்டத்தில் இயேசுவின் நாமத்தில் நான் ஜெயம் பெறுவேன்!" என்று **விசுவாசத்தோடு சொல்லுங்கள்.** அப்பொழுது **அற்புதங்களைக் காண்பீர்கள்!**

எனக்கு ஒரு தாயாரைத் தெரியும். அவர்களுடைய மகன் சிறுவனாயிருந்தபோது, ஒரு கொடிய நோயினால் பாதிக்கப்பட்டான். மருத்துவம் அவனைக் கைவிட்டபடியினால், விசுவாசத்தோடு இயேசுவினிடத்தில் மன்றாடினார்கள். இயேசு மனதுருகி, அந்த மகனைக் குணமாக்கினார். ஆகவே, தன் மகனை டாக்டருக்குப் படிக்க வைத்து, "ஏழைகளுக்கு உதவி செய்ய வைப்பேன்." என்று தீர்மானித்து ஜெபித்தார்கள். தன் மகனிடத்திலும் அடிக்கடி அதையே சொல்லி, அவனை வளர்த்தார்கள்.

அந்த மகனும் தன்னை தேவ சித்தத்திற்கு அர்ப்பணித்து, "கர்த்தர் என்னை டாக்டராக்குவார். நான் ஏழைகளுக்கு மருத்துவ உதவி செய்வேன்." என்று விசுவாசத்தோடு பிரயாசப்பட்டுப் படித்தான். பள்ளித் தேர்வு முடிந்து மார்க் வந்தபோது, எதிர்பார்த்ததை விட சில மார்க்குகள் குறைந்து விட்டது. என்றாலும், 'கர்த்தராகிய இயேசு, என்னை டாக்டராக்குவார்.' என்கிற விசுவாசத்தோடு மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வை எழுதினான். தேர்வின் முடிவுக்காகக் காத்திருந்தபோது, மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் சேர்க்கையெல்லாம் முடிந்து விட்டது. அவனது பெயர் அதில் வரவேயில்லை. காத்திருந்து, காத்திருந்து, ஏமாற்றம்தான் உண்டாயிற்று.

"இனி மருத்துவக் கல்லூரியில் சேர வாய்ப்பில்லை. பொறியியல் கல்லூரியிலாவது சேர்ந்து படிக்கட்டும்." என்று அவனுக்குச் சொல்லப்பட்டபோது, மற்றவர்களின் வற்புறுத்தலினால் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தான்.

என்றாலும் அவனது தாயார், "என் மகனுக்கு, மருத்துவக் கல்லூரியில் படிக்க கர்த்தர் வழி திறப்பார். அவன் டாக்டராகி, இயேசுவை மகிமைப்படுத்துவான்." என்று, விசுவாசத்தோடு ஜெபித்து வந்தார்கள். நான் அவர்களோடு பேசிய சமயத்திலும், "அவன் ஒரு இஞ்சினீயர் ஆகப் போவதில்லை. டாக்டராகி, மக்களுக்குச் சேவை செய்வான்." என்று விசுவாசத்தோடு கூறினார்கள். கல்லூரிகள் இயங்க ஆரம்பித்து, சில மாதங்கள் ஆகி விட்டது! சூழ்நிலையைப் பார்க்கும்போது இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழியும் இல்லை. என்றாலும் அந்தத் தாய், தன் மகனுக்காக அவ்வளவு விசுவாசத்தோடு ஜெபித்தார்கள்.

திடீரென்று, அரசாங்கத்திலிருந்து ஒரு அறிவிப்பு வந்தது. மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்வதைக் குறித்த காரியத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டு, ஒரு புதிய அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி அவனுக்கு மருத்துவக் கல்லூரியில் சேர அழைப்பு வந்தது. அவன் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்து, ஒரு டாக்டராகி விட்டான்!

'இது எப்படி நடந்தது?' என்பது, ஒரு ஆச்சரியம்தான்! கர்த்தர், தன் பிள்ளைகளுக்காக அந்த ஆண்டில் ஒரு சட்டத் திருத்தத்தையே கொண்டு வந்தார். **நீங்கள் விசுவாசித்தால்,** உங்களுக்கும், உங்கள் பிள்ளைகள் படிப்பிலும், **இயேசு அற்புதம்** செய்வார். உங்கள் குடும்பக் காரியத்தில், வேலையில், தொழிலில் இயேசு அற்புதம் செய்வார். சூழ்நிலைகளைப் பார்க்காதபடி, **இயேசுவின் வல்லமையை மாத்திரம் விசுவாசியுங்கள். விசுவாசத்தோடு ஜெபியுங்கள், அற்புத மாற்றங்கள் உண்டாவதைக் காண்பீர்கள்!**

**"...நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்..." (யோவான் 11:40.)** என்று, இயேசு சொல்லியிருக்கிறார். நீங்கள் எந்தக் காரியத்திற்காக அவரை விசுவாசிக்கிறீர்களோ; அந்தக் காரியத்தில், உங்களை அற்புதங்களைக் காணச் செய்வார். உங்கள் வெற்றிக்காக, உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்காக, **அவரை விசுவாசியுங்கள், நீங்கள் ஜெயம் பெறுவீர்கள்!**

# தேவ ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

**தாவீது, ஒரு இளம் வாலிபனாக இருந்த போதிலும், அந்த ராட்சதனைக் கண்டு பயப்படாமல், அவனை எதிர்த்து, ஜெயம் பெற்றதற்கு முக்கியமான இன்னொரு காரணம் உண்டு. தாவீது தேவ வல்லமையினால் நிறைந்திருந்தார். அவருக்குள் தேவனுடைய வல்லமை காணப்பட்டது. ஆகவேதான் தாவீது, அந்த ராட்சதனைக் கண்டு பயப்படவில்லை. விசுவாசத்தோடு அவனை எதிர்த்து நின்று, ஜெயித்தார்.**

இந்த தேவ வல்லமை, தாவீதுக்குள் எப்படி வந்தது? ஒருநாள் கர்த்தர், தாவீதை அபிஷேகம் பண்ணினார்! **"...அந்நாள்முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்;..."** 1 சாமு.16:13.

கர்த்தர், தம் ஆவியினால் தாவீதை நிரப்பி, வல்லமைப் படுத்தி இருந்தார். ஆகவேதான், தாவீதுக்குள் அந்த தைரியம் உண்டாயிருந்தது. இந்த, "தேவ ஆவியானவர் எப்படிப்பட்டவர்?" என்று பரிசுத்த வேதாகமம் கூறுவதைப் பாருங்கள்:

**"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." 2 தீமோ. 1:7.**

தேவ ஆவியானவர், நம்முடைய பயத்தை மாற்றி, நமக்கு பெலன் தருகிறவர்! அன்பான இருதயத்தை நமக்குத் தருகிறவர்! தெளிந்த புத்தியை நமக்குத் தருகிறவர்! கர்த்தராகிய இயேசு, **"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, ...எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."** அப். 1:8. அதாவது, "பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் வல்லமையைப் பெற்றுக் கொள்வீர்கள்." என்று அர்த்தம். பிரச்சனைகளை, போராட்டங்களை மேற்கொள்ளக் கூடிய வல்லமையை ஆவியானவர் நமக்குத் தருகிறார்.

நீங்கள் இன்று பயப்படுகிற, எந்தப் பிரச்சனைகளைச் சந்திக்கவும், ஜெயம் பெறவும், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வல்லமை தருகிறார்.

**இந்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தினமும் ஜெயம் பெறுவீர்கள்!**

விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:



**ஜெயங் கொடுக்கிற தேவனே, உமக்கு ஸ்தோத்திரம்! இந்தச் செய்தியின் மூலம் என்னோடு நீர் பேசியதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! இதுவரை நீர் எனக்குக் கொடுத்திருக்கிற வெற்றிகளுக்காக, உமக்கு ஸ்தோத்திரம்! இனிமேலும் நீர் எனக்கு வெற்றி தரப் போகிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! என் வெற்றிக்காக நான் உம்மையே சார்ந்து கொள்கிறேன்!**

**என் சுய பெலத்தையும், திறமைகளையும் நம்பி, என் இருதயத்தில் உம்மை விட்டு விலகியதற்காக என்னை மன்னியும்! இன்றுமுதல், என் வெற்றிக்காக உம்மையே நான் சார்ந்து கொள்கிறேன்! என் வெற்றிக்காக உம்மை நான் விசுவாசிக்கிறேன்! உம்முடைய வல்லமையை, அற்புதங்களை நான் விசுவாசிக்கிறேன்! உம்முடைய ஆவியினால் என்னை நிரப்பும்! ஞானத்தின் ஆவியினாலும், வல்லமையின் ஆவியினாலும் என்னை நிரப்பும்! எனக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில், விசுவாசத்தோடு என் வெற்றியை எதிர்பார்க்கிறேன்!**

**இயேசுவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுடைய கூடாரம்!

## தேவ திட்டம் நிறைவேறுகிறது!




**தே**சத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கும் தேவ பிள்ளைகள் மாதந்தோறும் பெருகிக் கொண்டு வந்தபடியினால், "பெரிய ஒரு இடத்தை வாங்கி, சுமார் 50,000 பேர் கூடி வந்து ஜெபிக்கும்படியான தேவனுடைய கூடாரத்தைக் கட்டு." என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

அது ஏராளமான பணம் செலவு செய்யக் கூடிய பெரிய ஒரு வேலையாக இருந்தபடியினால், நான் தயக்கம் காட்டினேன். அப்பொழுது கர்த்தரே ஒரு தேவ பிள்ளையின் மூலமாக 7½ ஏக்கர் நிலத்தை நமக்கு இலவசமாக வாங்கிக் கொடுத்தார். அப்பொழுது கர்த்தர், "நான் நிலத்தை தந்து விட்டேன், வேலையை ஆரம்பி!' என்று கட்டளையிட்டார்.

"ஆண்டவரே, அதற்கு கோடிக் கணக்கில் பணம் தேவைப்படுமே! நான் என்ன செய்ய முடியும்?" என்று கர்த்தரிடத்தில் கேட்டேன். அதற்கு அவர், "மோசேயைக் கொண்டு ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டி முடித்த கர்த்தர் நான்! நானே இதைக் கட்டி முடித்துத் தருவேன்! நீ யாரிடத்திலும் போய் கேட்க வேண்டியது வராது. என்னால் ஏவப்பட்ட என் ஜனங்களைக் கொண்டு இதை நான் செய்து முடிப்பேன்! நான் உனக்குக் கொடுத்த ஊழியப் பொறுப்புகளை நீ நிறைவேற்று. இதை நான் செய்து முடிக்கிறேன்." என்று வாக்குக் கொடுத்தார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்து வேலையை ஆரம்பித்தோம். கர்த்தர் சொன்னபடி, தேவனுடைய கூடாரத்தை அவரே கட்டிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்கென்று நான் எங்கும் காணிக்கை கேட்டதில்லை, சேகரித்ததும் இல்லை. நம் திறப்பின் வாசல் ஜெபத்தில் கூட, இதற்காக ஒருமுறை கூட காணிக்கை எடுத்ததில்லை. ஏவப்பட்ட தேவ பிள்ளைகள் முன்வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் கொடுக்கக் கொடுக்க, தேவனுடைய கூடாரம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இம்மட்டும் உதவி செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! சுமார் 75% வேலைகள் முடிந்திருக்கிறது. இன்னும் 25% வேலைகள் இருக்கிறது. இந்த ஆண்டுக்குள் கர்த்தர் முடித்துத் தர வேண்டும் என்று ஜெபிக்கிறேன். நீங்களும் **ஜெபியுங்கள்.**

தேவனுடைய கூடாரத்தின் **முன் பக்கத்தில், 24 மணி நேரமும் தேசத்திற்காக ஜெபிக்கும்படியான 'ஜெப கோபுரம்' கட்டப்பட வேண்டும்.** இதற்கான கட்டுமான வேலைகளை ஆரம்பித்திருக்கிறோம். இது ஜெயமாக முடிக்கப்பட **ஜெபியுங்கள்.** கர்த்தர் உங்கள் உள்ளத்தில் **ஏவினால்,** அவர் சொல்கிறபடி **உங்கள் பங்குகளை அனுப்பலாம்!**

கர்த்தர் ஒரே நபரைக் கொண்டு தன் காரியத்தைச் செய்து முடிக்க முடியும்! ஆனால், **இந்த எழுப்புதலுக்கான தேவ திட்டத்தில் நம் எல்லோருடைய பங்கும் இருக்க வேண்டும்** என்றுதான், கர்த்தர் நமக்கு இந்த வாய்ப்பைத் தருகிறார். நானும் கூட, என் பங்காக மாதந்தோறும் தேவனுடைய கூடாரத்திற்குக் கொடுத்து வருகிறேன்.

மட்டுமல்ல, தேவ ஆலோசனையின்படியே, தேவனுடைய கூடாரத்திற்கு வரும் காணிக்கையில், வட இந்தியாவில் மாதத்தோறும் ஒரு கிராம தேவாலயத்தைக் கட்டி வருகிறோம்.

**இந்த தேவ திட்டத்தில் இணைந்து செயல்பட உங்களையும் அழைக்கிறேன்.** வாருங்கள், நாம் எழுந்து கட்டுவோம்!

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.** - உங்கள் சகோதரன்.

### காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. (Ph: 011 293 0152, 071 437 1111)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவும், நானும்!

*Jesus & Myself!*



**கடந்த 2018 டிசம்பர் மாத இதழில், "நீங்கள் திருமணம் செய்து வந்த பிறகு, உங்களுடைய இல்லற வாழ்க்கை எப்படித் தொடங்கியது? 'கணவர் ஒரு ஊழியக்காரர்!' என்று நீங்கள் அறிந்து கொண்ட பிறகு, அந்த சமயத்தில் உங்கள் மனதிற்குள் என்னென்ன எண்ணங்கள் தோன்றியது? அதைப் பற்றிச் சொல்லுங்கள்.'' என்று கேட்டபோது...**

**"கணவர் ஒரு ஊழியக்காரராக இருக்கிறபடியினால், அவர்களோடு கூட ஊழியத்திலே ஒத்துழைக்க வேண்டும். கடைசி வரைக்கும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்களோடு இணைந்து கர்த்தருக்காக உழைக்க வேண்டும்." என்கிற ஒரு எண்ணம் என் மனதிற்குள் இருந்தது." என்று சொன்னதாக வாசித்து முடித்திருப்பீர்கள்.**

**இதோ, அதன் தொடர்ச்சி...**

''நீங்கள் ஒரு பெரிய வசதியான குடும்பத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்! ஆனால், ஒரு ஊழியக்காரரை உங்கள் கணவராக நீங்கள் கரம் பிடித்த பிறகு, அவ்வப்போது எதாவது பாடுகளை சந்தித்திருப்பீர்கள்! பணக் கஷ்டம் இருந்திருக்கும்! அந்தக் காலக் கட்டத்தில், அந்த மாதிரியான சூழ்நிலைகளை எல்லாம் எப்படி நீங்கள் மேற்கொண்டீர்கள்?'' என்று கேட்டபோது...

எந்த ஒரு பெண்ணும் திருமணம் முடிந்து, புகுந்த வீட்டிற்குப் போகும்போது, "எப்படி எல்லாம் இருக்க வேண்டும்!" என்று, பல விதமான கனவுகளோடுதான் இருப்பாள். அது இயற்கை! நான் நல்ல ஒரு வசதியான வீட்டில் பிறந்து வளர்ந்த பெண். ஆனால் நான் புகுந்த வீடு, ஓடு போட்ட சிறிய ஒரு வீடுதான். ஓடுகள் எல்லாம் உடைந்து போயிருந்தது.

இரவு நேரத்தில் வீட்டிற்குள் இருந்து மேலே பார்த்தால், வானத்திலுள்ள நட்சத்திரங்கள் தெரியும்! அப்படிப்பட்ட ஒரு வீட்டில், என் மாமியாரோடு ஒரே குடும்பமாக, 5 வருடங்கள் நான் சந்தோஷமாகத்தான் இருந்தேன்.

இரவு நேரத்தில் மேலே இருந்து கரையான் மண் என் தலையில் வந்து விழும். எழுந்து உட்கார்ந்து அதைத் தட்டிக் கொண்டு இருப்பேன். மழை பெய்தால், படுக்கை எல்லாம் நனைந்து விடும். அந்த வீட்டிற்குள் ஒரு மூலையில் நான் நின்று கொண்டிருப்பேன். இப்படியாக பல கஷ்டங்கள் மத்தியில்தான் நான் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

"அந்தக் கஷ்டமான சூழ்நிலையில், 'என் பெற்றோர் என் திருமண வாழ்க்கையில் தவறான முடிவெடுத்து விட்டார்களோ?' என்று, என்றைக்காவது நீங்கள் நினைத்ததுண்டா?'' என்று சகோதரியினிடத்தில் கேட்டபோது...

நான் அப்படி எல்லாம் எதுவுமே நினைக்கவில்லை. அதைப் பற்றி நான் யாரிடத்திலும் பேசியதும் கிடையாது. ஒருநாள் கூட என் பெற்றோரிடத்தில், "ஏன் என்னை இப்படிப்பட்ட ஒரு இடத்தில் கட்டிக் கொடுத்து விட்டீர்கள்?" என்று கேட்டதும் கிடையாது. ஆனால், "கர்த்தர் ஒருநாள் நம்மையும் ஆசீர்வதித்து, உயர்த்துவார்!" என்று எனக்குத் தெரியும். ஆகவே, எதைக் குறித்தும் நான் கவலைப்படாமல், அதற்காக நான் அமைதியாக ஜெபம் செய்து கொண்டிருந்தேன்.

நமது சகோதரர் அவர்களிடத்தில், ''சகோதரி அவர்கள் தன்னுடைய எதிர்பார்ப்புகளைப் பற்றி உங்களிடத்தில் எதாவது சொன்னார்களா? 'நாம் இப்படியாக ஊழியத்தில் இருக்கிறபடியினால், நீங்கள் இப்படியாகச் செய்தால் நன்றாக இருக்கும்.' என்று எதாவது ஆலோசனை சொன்னார்களா?'' என்று கேட்டபோது...

அவள் ஒருநாள் கூட என்னிடத்தில் அப்படி எதுவும் சொன்னதில்லை. ஒருவேளை அவள் தனியாக ஜெபம் செய்து கொண்டு இருந்திருக்கலாம். மற்றபடி என்னிடத்தில் எதுவும் சொல்ல மாட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சகோதரர் அவர்களிடத்தில், "அண்ணா, உங்கள் மனைவியினிடத்தில் இருக்கிற அனேகக் காரியங்கள் உங்களுக்குப் பிடித்திருக்கும்! குறிப்பாக, அவர்களிடத்தில் இருக்கிற உங்களுக்குப் பிடித்த காரியங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிச் சொல்லுங்கள்." என்று கேட்டபோது...

அவளுக்கு எப்போதும் எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டும். வீடு, அலுவலகம், நாங்கள் இருக்கிற பகுதிகள் எல்லாம் அதிக சுத்தமாக இருக்க வேண்டும். எங்கள் வீட்டில் எந்தப் பகுதியைப் பார்த்தாலும் சுத்தமாக இருக்கும். ஜன்னல் கம்பியில் கூட தூசியைப் பார்க்க முடியாது! அந்த அளவிற்கு சுத்தமாக வைத்திருப்பாள்.

திருமணம் செய்து வந்த சமயத்தில், 5 வருடங்கள் என் பெற்றோரோடு கூடத்தான் இருந்தோம். அதற்குப் பிறகுதான் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழிய வளாகத்திற்குள் குடி வந்தோம்.

அந்த நாட்களில் எங்கள் வீட்டில் குளியலறையோ, கழிப்பறை வசதியோ கூட கிடையாது. அந்த சூழ்நிலையிலும், என் மனைவி அவைகளை எல்லாம் பொறுத்து, சகித்து, 5 வருடங்கள் என் பெற்றோரோடு கூட இருந்தாள். ஒருநாள் கூட, "இது இல்லையே! அது இல்லையே!" என்றெல்லாம் பேசியதே கிடையாது.

அந்த ஆரம்ப நாட்களில், அவளுக்கு ஒரு புடவை கூட வாங்கிக் கொடுக்க என்னால் முடியவில்லை. அதற்காக, "எனக்கு நீங்கள் ஒரு புடவை கூட வாங்கிக் கொடுக்கவில்லையே!" என்று, ஒருநாள் கூட அவள் வருத்தப்பட்டுப் பேசியதே கிடையாது. எதைப் பற்றியும் அவள் குறை சொன்னதே கிடையாது.

அவள் ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், அவளுடைய பெற்றோர், "நீ திருமணம் செய்து கொண்டு ஒரு ஊழியக்காரருடைய வீட்டிற்குப் போகிறாய். நம்முடைய வீட்டில் அனேகப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அதனால் இப்போதைக்கு எங்களால் ஒன்றும் செய்ய முடியாது." என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.

ஆனால் கர்த்தர், "நீ யாரிடத்திலும் ஒன்றும் கேட்கக் கூடாது." என்று, ஏற்கெனவே என்னிடத்தில் சொல்லி இருந்தார். ஆகவே நானும், "என் பெற்றோரிடத்தில் கூட எதுவுமே கேட்கக் கூடாது." என்று ஒரு தீர்மானம் செய்திருந்தேன்.

இந்த விஷயத்தில், எங்கள் இருவருக்குள்ளும் ஒருமனம் இருந்தது. எந்த சூழ்நிலையிலும், "மற்றவர்களிடத்தில் கேட்க வேண்டும்." என்கிற ஒரு எண்ணம் எங்கள் இருவருக்குமே கிடையாது. தேவைகள் மத்தியிலும், பாடுகளின் மத்தியிலும் முறுமுறுக்காமல், மிகுந்த பொறுமையாக என் மனைவி என்னோடு கூட நின்றாள்.

இரண்டாவதாக, அவளிடத்தில் எனக்குப் பிடித்த இன்னொரு காரியம், என்னை விட அதிகமாக ஜெபம் செய்வாள். அவளுடைய ஜெபம்தான் என்னுடைய ஊழியத்திற்குப் பெலன்!

நான் ஊழியத்தின் நிமித்தமாக எங்கு சென்றாலும், என்னோடு கூட வருவாள். ஊழியத்தில் என்னோடு கூட, அனேகர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் விட, என்னுடைய மனைவிதான் எனக்கு பெரிய ஒரு பாதுகாப்பு!

நான் தினந்தோறும் அதிகாலையில் எழும்பி ஜெபிக்கிறதுண்டு. ஆனால், எனக்கு முன்பாகவே என் மனைவி எழும்பி, முழங்காலில் நின்று ஜெபித்துக் கொண்டிருப்பாள். சில சமயங்களில் நடு இரவில் எழும்பி, ஜெபித்துக் கொண்டிருப்பாள்! அவளுடைய ஜெபம்தான் எனக்குப் பெரிய பெலன்!

"உங்கள் ஊழியப் பாதையில், அதிகமான ஊழியப் பழுவில் (Busy) இருப்பீர்கள் அல்லவா? இப்பொழுது தொலைக்காட்சி ஊழிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! ஊழியத்தின் நிமித்தமாக அனேக இடங்களுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறீர்கள்! இப்படிப்பட்ட சமயங்களில், உங்கள் மனைவி எந்தெந்த விதங்களில் உங்களுக்கு உதவியாக இருக்கிறார்கள்?" என்று நமது சகோதரர் அவர்களிடத்தில் கேட்டபோது...



ஊழியத்தின் ஆரம்பக் காலத்தில், நாங்கள் கன்னியாகுமரி பகுதியில் அதிகமாக ஊழியம் செய்தோம். அந்த நாட்களில், ஒரு குழுவாகத்தான் ஊழியம் செய்யப் போவோம். என் மனைவி தவிர, மற்றவர்கள் எல்லோரும் ஆண்கள். எங்களோடு வந்தவர்களில் சிலர், கூட்டம் முடிந்து அடுத்த நாள் வேலைக்குப் போக வேண்டியது இருக்கும்.

ஆகவே, கூட்டம் முடிந்த அன்றைக்கு இரவே நாங்கள் ஊருக்குத் திரும்புவோம். கூட்டத்தை நடத்திய அங்குள்ள சில தேவ பிள்ளைகள் எங்களை மெயின் ரோட்டில் கொண்டு வந்து விட்டு விடுவார்கள். சில சமயத்தில், மேக்காமண்டபத்தில் இரவு 11:00 மணிக்குத்தான் பஸ் ஏறுவோம். நாகர்கோவில் பஸ் நிலையத்திற்கு இரவு 12:00, அல்லது 1:00 மணிக்குத்தான் வந்து சேர்வோம். அல்லது திருவனந்தபுரம் பஸ் வந்தால், அதில் ஏறி, சில சமயங்களில் உட்கார இடமில்லாமல் இருந்தால், நின்று கொண்டே சுமார் 1:00 மணிக்கு மேல்தான் வந்து சேர்வோம். அதற்குப் பிறகு காலையில் 7:00 மணிக்குத்தான் நாசரேத்துக்கு பஸ் இருக்கும்.

- தொடரும்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## 2019 புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டத்தில்

# காரியங்களை சித்திக்கப் பண்ணிய கர்த்தர்!

இந்த **2019**ம் வருடத்திற்கான வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக, நாலுமாவடி-தேவனுடைய கூடாரத்தில், கடந்த (2019) **ஜன. 1**ம் தேதி நடைபெற்ற **புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டத்தில்**, சுமார் **40,000**க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். மதியம் 1:00 மணியளவில் சகோ. **ஜீவா மனோகர்** அவர்கள் ஜெபித்து ஆரம்பிக்க, பாடல்-ஆராதனை வேளையில் சகோ. **ஜாண் பன்னீர் செல்வம்**, சகோ. **மனோவா** ஆகியோர், இந்த வருடத்தின் வாக்குத்தத்தப் பாடலையும் பாடி, வந்திருந்த ஜனங்களை தேவப் பிரசன்னத்திற்கு உள்ளாக்கினார்கள்.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியங்களை கர்த்தர் நடத்துகிற விதங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்ட பிறகு, அறங்காவலர்கள், ஊழியத் துறைத் தலைவர்கள் மற்றும் இணை ஊழியர்களுக்காக, சகோ. **கார்த்தி** C. **காமாலியேல்** அவர்கள் சிறப்புப் பிரார்த்தனையை ஏறெடுத்தார்கள்.

இந்த வருடத்திற்கான, **'கர்த்தர் உன்னுடனே!'** என்கிற புதிய Audio CD ஒன்றை சகோ. A. **அப்பாத்துரை** அவர்கள் ஜெபித்து வெளியிட, அமெரிக்காவைச் சேர்ந்த, சகோ. **ஜோசப் மனோகரன்**, சகோ. **பிரபாகரன்**, கனடாவைச் சேர்ந்த, சகோ. **ஆபிரகாம்**, நியூசிலாந்தைச் சேர்ந்த, சகோ. **கிறிஸ்டோபர் ரவி**, சகோதரி **ஜீலி** மற்றும் சில அரசியல் பிரமுகர்கள் CDக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'இயேசு விடுவிக்கிறார்' இணைய தளத்தில் **24 மணி நேரமும்** இயங்கக் கூடிய, 'Comforter T.V.' என்கிற Christian Digital Channel **ஜன.1ம் தேதிமுதல்**, சோதனை ஓட்டத்திற்காக ஜெபித்து ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, இந்த வருடத்தில் இந்தியாவிலும், உலகத்தின் பல நாடுகளிலும் நடக்கப் போகிற காரியங்களைப் பற்றி, கர்த்தர் தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்திச் சொன்னவைகளில் சிலவற்றை, நமது சகோதரர் அவர்கள் ஜனங்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டு, ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

கடந்த 2018ம் ஆண்டில் தாங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை சிலர் சாட்சியாகப் பகிர்ந்து கொண்டதைத் தொடர்ந்து, நமது சகோதரர் அவர்கள், கர்த்தர் கொடுத்த, **"காரிய சித்தியோ கர்த்தரால் வரும்."** **(நீதி. 16:33)** என்கிற வாக்குத்தத்தத்தின்படி தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தபோது, வந்திருந்த அனைவரும் அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

கடைசி ஜெப வேளையில், கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த விடுதலை மற்றும் சுகத்தை அனேகர் சாட்சியாகப் பகிர்ந்து கொண்டு, தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். - **ஒருங்கிணைப்பாளர்.**

## இயேசு செய்த அற்புதங்களில் சில...

### கட்டி மறைந்தது!



ஒரு வருடமாக என் இடது பக்க இடுப்புப் பகுதியில் ஒரு **கட்டி** இருந்தது. நான் டாக்டரிடத்தில் போவதற்குப் **பயந்து கொண்டிருந்தேன்**. ஜெப வேளையில், கர்த்தர் அந்தக் **கட்டியை** மிக அற்புதமாக **மறையப் பண்ணினார்**. - **குட்டி, உடன்குடி.**

### பெயர் சொல்லி அழைத்து சுகம்!



**எலும்பு தேய்மானத்தினாலும், முழங்காலில்** இருந்த **வலியினாலும் நடக்க முடியாமல்** மிகவும் கஷ்டப்பட்டேன். வயிற்று **வலியினாலும்** வேதனைப்பட்டேன். ஜெப வேளையில், ஆவியானவர் நமது சகோதரர் அவர்கள் மூலமாக என் **பெயரைச் சொல்லி அழைத்து**, என்னைத் தொட்டு, அற்புதமான **சுகத்தை எனக்குக் கொடுத்தார். - சந்திரா.**

### 11 வருட, செவிட்டுக் காது திறந்தது!



என் இடது காது சுமார் **11 வருடங்களாக கேட்கும் திறனை முற்றிலுமாக இழந்து** போய் இருந்தது. ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னை முழுவதுமாக ஆட்கொண்ட போது, தெளிவாகக் **கேட்கும் திறனைப் பெற்றுக் கொண்டேன். - ரெஜினா,** ஆலங்குளம்.

### கைவிடாத கர்த்தர்!



என் **இருதயம்** மிகவும் **பெலவீனப்பட்டு** இருந்தது. டாக்டர்கள் என்னை **கைவிட்டார்கள்**. ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி**, எனக்காக ஜெபித்தபோது, ஒரு அபிஷேகம் என்னை பலமாக ஆட்கொண்டது. அந்நேரமே நல்ல **சுகத்தைப் பெற்றுக் கொண்டேன். - சந்திரா.**

### மரணப் போராட்டம் மாறியது!



**தீராத நெஞ்சு வலியினால்** பாதிக்கப்பட்டு, 2 வருடங்களாக **மரணத்தோடு போராடிக்** கொண்டிருந்தேன். **வயிற்றுக்குள்ளும்** ஏதோவொரு **பெரிய பாரம்** இருந்தது. கூட்டத்தில் என்னால் **உட்கார்ந்து இருக்கவே முடியவில்லை**. ஜெப வேளையில், நான் வேண்டிக் கொண்டபடியே, நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலின்படியே என் **பெயரைச் சொல்லி ஜெபித்தபோது, மரணப் போராட்டத்திலிருந்து கர்த்தர்** என்னை **விடுவித்தார். - சேகர்.**

### பரிபூரண சுகம் பெற்றேன்!



என் **2 சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு வலியினாலும், மூச்சுத் திணறலினாலும்** 2½ வருடங்களாக கஷ்டப்பட்டேன். திடீரென்று **2 கால்களும் கருப்பாக மாறி** விட்டது. நடக்க முடியாத **நிலைமையில்**, 5 இடங்களில் உட்கார்ந்து, உட்கார்ந்துதான் கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டதை உணர்ந்தேன். அப்பொழுதே **பரிபூரண சுகத்தைப்** பெற்றுக் கொண்டேன். - **சித்ரா, வள்ளியூர்.**

### வேதனை மாறி, சுகம்!



புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்த என் இடது **மார்பு ஆபரேஷன் செய்யப்பட்டு இருந்ததின்** நிமித்தமாக **உண்டான வலியினால்**, இடது **கையை அசைக்க முடியாமல்** மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் ஆவியானவர் வெளிப்படுத்தியபடியே என் **பெயரைச் சொல்லி அழைத்து**, எனக்காக ஜெபித்தார்கள். அந்நேரமே கர்த்தர் எனக்கு **நல்ல சுகத்தைக் கொடுத்தார். - சந்திரா.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# நீங்கள் வெற்றியைக் காண்பீர்கள்!

உங்களுக்குத்தான் கர்த்தர் சொல்கிறார்; 'நீங்கள் வெற்றியைக் காண்பீர்கள்!' நீங்கள் எதிர்பார்க்கிற வெற்றியை கர்த்தர் உங்களுக்குத் தருவார். உங்கள் படிப்பில், வேலையில், குடும்பத்தில், தொழிலில் நீங்கள் எதிர்பார்க்கிற வெற்றியைக் காண்பீர்கள்! கடந்த நாட்களில் ஏறெடுத்த ஜெபத்தினால் ஜெயம் பெற்றவர்களைப் பாருங்கள்:

## பிசாசின் பிடியிலிருந்து விடுதலை!

எங்கள் குடும்பத்திற்குள் எப்போதும் பிசாசுப் போராட்டமாகவே இருந்தது. என்னால் ஜெபிக்க முடியாது. அடிக்கடி தலை வலி வந்து கொண்டே இருக்கும். அது 'பிசாசுப் போராட்டம்' என்று தெரியாமல், மாத்திரை போடுவேன். ஆனால் தலை வலி போகாது. குடும்பத்திற்குள் சமாதானமே இல்லை.



இந்நிலையில், திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, தொடர்ந்து ஜெபித்து வந்தேதேன். கர்த்தர் பிசாசின் பிடிலிருந்து எங்கள் குடும்பத்தை விடுதலையாக்கி, சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுத்தார். **– மெர்சி, பல்லடம்.**

## 14 வருடங்களுக்குப் பிறகு, குழந்தை!

என் சகோதரிக்குத் திருமணமாகி, 14 வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. எவ்வளவோ மருத்துவம் பார்த்தும் பலனில்லை. என் தாயார் மிகுந்த மன வேதனையோடு தொடர்ந்து திறப்பின் வாசல் ஜெபத்தில் ஜெபித்தார்கள்.



கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அவளுடைய கர்ப்பத்தை ஆசீர்வதித்து, அழகான ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்க கிருபை செய்தார்.

மட்டுமல்ல, என் மைத்துனருக்கு உண்டான ஒரு விபத்தின் நிமித்தம், அடிக்கடி திடீர் திடீரென்று உண்டான வலிப்பினால் (Fits) மிகவும் கஷ்டப்பட்டார். என் தாயார் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, ஜெபித்துக் கொண்டிருந்தபோது, ஆவியானவர், நமது சகோதரர் அவர்கள் மூலமாக என் தாயாரின் மன வேண்டுதலை வெளிப்படுத்தி, கர்த்தர் என் மைத்துனருக்கு பூரண சுகத்தைத் தருவதாக தீர்க்கதரிசனமாகச் சொல்லி, மிக அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். **– செல்லத்துரை, நாசரேத்.**

## ஜெபத்தைக் கேட்டு, அற்புதம்!

என் 7வயது மகன், ஒரு வருடமாக உப்பு வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டான். தினமும் 3 வேளை மருந்து-மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். தினமும் இரத்தத்தை பரிசோதனை செய்ய வேண்டும். குறிப்பிட்ட சில உணவுகளை மட்டும்தான் சாப்பிட முடியும்! எவ்வளவோ சிகிச்சைகளைச் செய்து பார்த்தும், அவனுக்கு சுகம் கிடைக்கவில்லை. டாக்டர்கள், 'சிறுநீரகத்தில் பாதிப்பு உண்டாகும்! உங்கள் தெய்வத்தை வேண்டிக் கொள்ளுங்கள்!' என்று சொல்லி விட்டார்கள்.



இந்நிலையில், ஒரு பொருத்தனை செய்து, அவனுக்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் ஜெபிக்கும்படியாக, மிகுந்த மன வேதனையோடு கேட்டுக் கொண்டோம். அதற்குப் பிறகு பரிசோதித்துப் பார்த்த டாக்டர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, "உங்கள் மகனுக்கு பரிபூரண சுகம் கிடைத்திருக்கிறது. நீங்கள் வணங்குகிற தெய்வம்தான் அவனைக் குணப்படுத்தி இருக்கிறது!" என்று சொன்னார்கள். **– நாயகன், காவல் கிணறு.**

## இரத்த வாந்தி நின்றது!

நான் ஒரு 'இந்து'க் குடும்பத்தைச் சேர்ந்தவள். 20 வருடங்களுக்கு முன்பாக, அடிக்கடி இரத்த வாந்தி எடுத்து, மிகவும் கஷ்டப்பட்டேன். மருத்துவ சிகிச்சையில் சுகமாகாத நிலையில், திறப்பின் வாசல் ஜெபத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு, பொருத்தனையோடு அதில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். **– நாகலதா, நாகர்கோவில்.**



## அற்புத சுகம் கொடுத்தார்!

வாய் திறந்து சாப்பிட முடியாதபடி, என் தொண்டைக்குள் உண்டாஇருந்த வலியினால் ஒரு வருட காலமாக கஷ்டப்பட்டேன். பரிசோதித்துப் பார்த்தபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டையின் இரண்டு பக்கங்களிலும் **தேவையில்லாத எலும்புகள்** வளர்ந்திருப்பது தெரிய வந்தது. மருத்துவத்தால் சுகமாகாத நிலையில், திறப்பின் வாசல் ஜெபத்தின் நேரலையை (LIVE) தொலைக்காட்சியில் பார்த்து, என் சுகத்திற்காக ஜெபித்தேன். கர்த்தர் அற்புதமான **சுகத்தைக் கொடுத்தார்**.
**- ராஜேஸ்வரி,** பெங்களூரு.



## இரட்டிப்பான நன்மை!

எனக்குத் திருமணமாகி 2½ வருடங்களாக குழந்தை **பாக்கியம் இல்லாமல்** இருந்தது. பரிசோதித்துப் பார்த்தபோது, என் கர்ப்பப் பையில் **நீர் கட்டி** இருப்பது தெரிய வந்தது. எவ்வளவோ செலவழித்து சிகிச்சை செய்து பார்த்தும், பலனில்லை. திறப்பின் வாசல் ஜெபத்தன்று கடைசி ஜெப நேரத்தில் சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ் அவர்கள்** மூலமாக கர்த்தர் எனக்கொரு வாக்குத்தத்தம் கொடுத்தார். அதை வைத்து ஜெபித்தபோது, எனக்கிருந்த எல்லாப் **பிரச்சனைகளையும்** கர்த்தர் **நீக்கி**, அந்த வருடமே என் கர்ப்பத்தை ஆசீர்வதித்து, அழகான ஒரு ஆண் **குழந்தையைப் பெற்றெடுக்கக்** கிருபை செய்தார். அதன் பிறகு ஒரு **பெண் குழந்தையையும்** கர்த்தர் எனக்குக் கொடுத்தார். **- ஜெனிபர், கல்லிடைக்குறிச்சி.**



## சிறையிருப்பு மாறியது!

என் கணவர் கத்தார் தேசத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார். 6 மாதங்களாக **உயர் இரத்த அழுத்தம்** (Blood Pressure) மற்றும் **தீராத தலை வலியினால்** மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். "ஒருநாள் மாத்திரை சாப்பிடவில்லை என்றால் கூட, உயிருக்கே ஆபத்தாகி விடும்!" என்று டாக்டர் சொல்லி விட்டார். நாங்கள் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தோம்.



மட்டுமல்ல, கத்தார் தேசத்தில் நடைபெற்ற நமது சகோதரர் அவர்களுடைய கூட்டத்தில் என் கணவர் கலந்து கொண்டார். அன்றைய தினம் நான் Youtube மூலமாக அந்தக் கூட்டத்தை நேரலையில் (LIVE) பார்த்துக் கொண்டே, எங்களுக்காக நான் ஜெபிக்காமல், அந்த தேசத்தின் மக்களுடைய ஆசீர்வாதத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். கடைசி ஜெப வேளையில் மட்டும், "கர்த்தர் என் கணவருடைய பெயரைச் சொல்லி அழைத்து, அவருக்கு சுகத்தைக் கொடுக்க வேண்டும்." என்று ஒரு வார்த்தை சொல்லி ஜெபித்தேன். கர்த்தர் அப்படியே செய்து, என் கணவருக்கு **நிரந்தரமான ஒரு சுகத்தைக் கொடுத்தார்.**
**- இமல்டா லிஸி, கன்னியாகுமரி.**

## வேண்டுதலைக் கேட்டார்!

நான் வெளி நாடு செல்ல முயற்சி செய்து, அது வாய்க்காமல் போனபடியினால், கடுமையான **மன அழுத்தத்திற்கு ஆளாகி, சரீர ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு**, இரண்டு **கால்களும் வீங்கி, மூக்கிலிருந்து அடிக்கடி இரத்தம்** வர ஆரம்பித்தது. மிகவும் **பயந்து போனேன்**. மருந்து-மாத்திரைகளினால் ஒரு நிரந்தரமான சுகம் கிடைக்கவில்லை.



மிகுந்த மன வேதனையோடு திறப்பின் வாசல் ஜெபத்தில் எனக்காக ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, பரிபூரணமான **சுகத்தைக் கொடுத்தார்**. மட்டுமல்ல, ஒரு மாதத்திற்குள் **வெளி நாடு செல்வதற்கும்** கர்த்தர் எனக்குக் **கிருபை செய்தார்**. **- கிதியோன், நாகர்கோவில்.**

## வேலை கிடைத்தது!



ஒரு **வேலை இல்லாத நிலைமையில்**, பல விதமான **போராட்டம்** மற்றும் **பிரச்சனையின்** மத்தியில்தான் முதன்முறையாக திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, எல்லாப் **பிரச்சனைகளையும் நீக்கி**, நல்லதொரு **வேலையையும்** எனக்குக் **கொடுத்து**, என்னை சந்தோஷப்படுத்தினார்.
**- அனிக்கா ரேஸ்மி,** பெங்களூரு.

பாருங்கள், இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்! உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 - மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம். நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள். ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.
- உங்கள் சகோதரன்.

நாலுமாவடி
திறப்பின் வாசல் ஜெபம்!
**உங்கள் அற்புதத்தின் நாள்: 2019**
**பிப்ரவரி**
**23**
(கடைசி சனிக்கிழமை)

Address: Standing in the Gap Prayer, Nalumavadi-628 211, Thoothukudi Dist., India.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபுதாபி மற்றும் தோஹாவில் இறங்கிய எழுப்புதல் அக்கினி!

"மத்தியக் கிழக்கு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் எழுப்புதலுக்காக பாரத்தோடு ஜெபிக்க வேண்டும்!" என்று, ஆவியானவர் திருவுளம் பற்றியதால், கடந்த 4 வருடங்களாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தேசத்தில், **'12 மணி நேர உபவாச ஜெபம்!'** நடத்தி, தேவ பிள்ளைகளுடைய உள்ளத்தில் அந்த தேசத்தைக் குறித்த உத்தரவாதத்தைக் கொண்டு வர கர்த்தர் உதவி செய்தார். ஓமான் தேசத்திலும் உபவாச ஜெபங்களை நடத்தி இருக்கிறோம். கடந்த 2 வருடங்களாக **கத்தார்** தேசத்தில், **'எழுப்புதல் அக்கினி தோஹா!'** கூட்டங்களை நடத்தி, தேவ பிள்ளைகளுடைய உள்ளத்தில் எழுப்புதல் தரிசனத்தை விதைக்க, கர்த்தர் கிருபை பாராட்டினார்.

## அபுதாபி - 12 மணி நேர பரிசுத்த உபவாச ஜெபம்!

துபாய் தேசத்தில், கடந்த 3 வருடங்களாக 12 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்தினோம். கடந்த 2018ம் வருடத்திலும் ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, **அபுதாபி-Brethren Church Centre**ல் வைத்து, **'12 மணி நேர பரிசுத்த உபவாச ஜெபம்!'** நடைபெற்றது. அங்குள்ள அனைத்து தமிழ் திருச்சபைகளின் ஆதரவோடு, சகோ. **ஜோனா ஜெசியா** மற்றும் சகோ. **கிரேப்ஸன்** ஆகியோர் இணைந்து, இந்த உபவாச ஜெபத்திற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

2018 டிச. 2ம் தேதி நடைபெற்ற இந்த உபவாச ஜெபத்தில், சுமார் **1,000** தேவ பிள்ளைகள் மிகுந்த வாஞ்சையோடு வந்து கலந்து கொண்டார்கள். மட்டுமல்ல, சுமார் 26 திருச்சபைகளைச் சார்ந்த போதகர்களும் கலந்து கொண்டு, பாரத்தோடு ஜெபித்தார்கள்.

ஆரம்பம்முதல், இறுதிவரை ஆவியானவர் பலமாய் அசைவாடி, தமது ஜனத்தை ஜெப ஆவியினாலும், ஆத்தும பாரத்தினாலும் நிறைத்து தேசத்திற்காக ஜெபிக்க வைத்தார். அந்த ஜெப வேளையில் அனேகருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு, ஜெபத்திற்கான பதிலையும் பார்க்க, கர்த்தர் கிருபை செய்தார்.

ஜெபித்த தேவ பிள்ளைகளை வெறுமனே அனுப்பாமல், ஒவ்வொருவருக்கும் அற்புதம் செய்து, தங்களுடைய சிறையிருப்பு மாறியவர்களாகக் கடந்து செல்ல, கர்த்தர் அனுக்கிரகம் செய்தார்.

உபவாச ஜெபத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்-ஆராதனை




ஜெப வேளை






உபவாச ஜெபத்தில் - திருச்சபை மேய்ப்பர்கள் தேசத்திற்காக ஜெபிக்கிறார்கள்



அபுதாபி ஊழியத்தை பொறுப்பெடுத்து நடத்திய சகோ. ஜோனா ஜெசியா மற்றும் சகோ. கிரேப்ஸன் ஆகியோருடன் நமது சகோதரர்

## அபுதாபி கூட்டத்தில் இயேசு செய்த அற்புதங்களில் சில...

### காதில் அற்புதம்!



என்னுடைய வலது காதுக்குள் **2 வருடங்களுக்கும்** மேலாக, எப்பொழுதும் ஒரு **இரைச்சல்** கேட்டுக் கொண்டே இருந்தது. எவ்வளவோ மருத்துவம் செய்தும் சுகமாகவில்லை. ஜெப வேளையில், அந்தக் காதில் கை வைத்து ஜெபித்தேன். அந்த நிமிடமே **சுகத்தைப் பெற்றுக் கொண்டேன்.**
**- கனிமொழி.**

### உடனடியாக அற்புதங்கள்!



என் இடது கண்ணில் **70 நாட்களாக வீக்கம்** இருந்தது. அந்தக் கண்ணிலிருந்து **தண்ணீர்** வடிந்து கொண்டே இருக்கும். மாத்திரமல்ல, தொடர்ச்சியான **விக்கலினால்** மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், **வீக்கம் மாறி, தண்ணீர் வடிவதும், விக்கலும்** உடனடியாக **நின்று** விட்டது.
**- பால முருகன்.**

### கண்ணில் அற்புதம்!



என்னுடைய ஒரு கண்ணில் **'புண்'** வந்து, பார்வையை முற்றிலுமாக **இழந்தேன்.** எவ்வளவோ சிகிச்சை செய்து பார்த்தும், பார்வைத் திறன் வரவில்லை. ஜெப வேளையில், புண் **மறைந்து,** தெளிவான **பார்வையையும் பெற்றுக் கொண்டேன்.** - பார்வதி.

### காது அடைப்பு மாறியது!



என் மகள், அதிகமான **காது வலியினாலும்,** காது **அடைப்பினாலும்** ஒரு மாதமாக கஷ்டப்பட்டாள். ஜெப வேளையில், அவளுடைய காதில் கை வைத்து ஜெபித்தேன். கர்த்தர் அற்புதமான **சுகத்தைக் கொடுத்தார். - அருளானந்தம்.**

## எழுப்புதல் அக்கினி தோஹா-2018!

அதைத் தொடர்ந்து, கடந்த 2018 டிச. 4,5,6 தேதிகளில், **கத்தார்** தேசத்தின் தலைநகர் **தோஹாவில்** உள்ள **Inter Denominational Christian Church Complexல்** வைத்து, **'எழுப்புதல் அக்கினி தோஹா-2018!'** கூட்டத்தை நடத்த, கர்த்தர் கிருபை பாராட்டினார். Word of God திருச்சபை போதகர், Pr. டேவிட் மற்றும் அத்திருச்சபை மக்கள், இக்கூட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

முதல் நாள் கூட்டம், **திறப்பின் வாசல் ஜெபமாக** ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம், திறப்பிலே நின்று ஜெபிப்பதைக் குறித்து நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் தேவ செய்தியளித்து ஜெபத்தில் நடத்தியபோது, அனேகர் மன்றாட்டு ஜெப ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். தொடர்ந்து தேசத்திற்காக ஜெபிக்க, தங்களை அர்ப்பணித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூடாரம் நிரம்பும்படியாகக் கூ
வந்திருந்த தேவ பிள்ளைகள்





Pr. டேவிட்

(Word of God Church)



பாடல் குழுவினர்



தேசத்திற்காக தினந்தோறும் திறப்பிலே நிற்க
தங்களை அர்ப்பணித்த தேவ பிள்ளைகள்

கடைசி 2 நாட்கள் கூட்டங்களை, 'விடுதலைப் பெருவிழா!'வாக நடத்த, கர்த்தர் கிருபை செய்தார். கூட்டம் நடைபெற்ற கூடாரம் நிரம்பி வழியும்படியாக ஜனங்கள் கூடி வந்திருந்தனர். அனேக கிறிஸ்தவரல்லாத ஜனங்களும் வந்திருந்தனர். செய்தி வேளையில், இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் தரும் விடுதலையைக் குறித்து நமது சகோதரர் அவர்கள் தேவ செய்தியளித்து ஜெபத்தில் நடத்தியபொழுது, ஆவியானவர் பலமாய் ஊற்றப்பட்டார். அனேகர் விடுதலை பெற்று, சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். - **ஒருங்கிணைப்பாளர்.**

## கத்தார் கூட்டங்களில் இயேசு செய்த அற்புதங்களில் சில...

### கர்த்தர் குணமாக்கினார்!



என் **2 கைகளிலும் இருந்த வேதனையினால், 3 வருடங்களாக கைகளை உயர்த்த முடியாமலும், 3 மாதங்களாக காதுக்குள் இருந்த இரைச்சலினாலும்** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டதை உணர்ந்தேன். அந்நேரமே **பூரண சுகம்** கிடைத்தது. **- பிரான்சிஸ்.**

### பரிபூரண சுகம்!



**மூட்டு வலியினால்** சுமார் **12 வருடங்களாக அவதிப்பட்டேன்.** Wheel Chairதான் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். வலது **கண்ணில்** பிரச்சனை வந்து, **ஆபரேஷன்** செய்து 3 மாதங்களாகியும் **வலி குறையவில்லை.** மட்டுமல்ல, **காதுக்குள் இருந்த குடைச்சலினால் 3 வருடங்களாக** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டபோது, எல்லாப் பிரச்சனைகளிலிருந்தும் **விடுதலை பெற்றேன். - லில்லி இம்மானுவேல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நொடிப் பொழுதில் அற்புதம்!



எனக்குப் புற்று நோய் வந்திருந்ததின் நிமித்தமாக, என் வலது மார்பகம் ஆபரேஷன் மூலமாக அகற்றப்பட்டது. ஆனாலும், **அந்த இடத்தில் வலி** இருந்து கொண்டே இருந்தது. ஜெப நேரத்தில், அந்த இடத்தில் கை வைத்து ஜெபித்தேன். நொடிப் பொழுதில் **வலி மறைந்து போனது. - ஜோஸ்பின்.**

### முதுகுத் தண்டில் அற்புதம்!



என் **முதுகுத் தண்டில்** இருந்த ஒரு **பிரச்சனையினால்**, ஆபரேஷன் செய்து **2 வருடங்களாகியும், வலி** குறையவில்லை. குனிந்தால் அதிகமாக வலிக்கும். திடீரென்று **2 கால்களும் இழுத்துக்** கொள்ளும். ஜெப வேளையில், தேவ வல்லமை என்னை ஆட்கொண்டபோது, அற்புதமான **சுகத்தைப் பெற்றுக் கொண்டேன். - சத்தியசீலன்.**

### வல்லமை தொட்டது!



**சிறுநீரகத்தில்** இருந்த **'கல்'** பிரச்சனையால் கஷ்டப்பட்டேன். ஆபரேஷன் செய்தும் குணமாகவில்லை. ஒரு வருடமாக **கண்ணில் உறுத்தல்** மற்றும் **அரிப்பு** காணப்பட்டது. டாக்டர்கள் ஆபரேஷன் செய்யச் சொன்னார்கள். ஜெப வேளையில் கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டது. அந்நேரமே பூரண **சுகத்தைப் பெற்றேன். - ஜோசப்.**


இலங்கை - **யாழ்ப்பாணத்தில்**

## திறப்பின் வாசல் ஜெப முகாம்!



(3 நாட்கள் உபவாச ஜெபம்)

நாள்: 2019 **ஏப்ரல் 15, 16, 17.**
(15, 16 தேதிகளில் காலை 9:00 - மாலை 5:00 மணிவரை.
17ம் தேதி காலை 9:00 - மதியம் 2:00 வரை)

தேவ செய்தியாளர்கள்:
**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்,**
**சகோ. ஜாண் பாலக்குமார்.**

திருச்சபைகளில் எழுப்புதல் உண்டாக, எல்லா ஜனத்துக்கும் இரட்சிப்பு உண்டாக, இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக திறப்பில் நின்று ஜெபிக்க வாருங்கள்!

தொடர்புக்கு:077 2850105.011 2930152.071 4371111.

வாங்கி விட்டீர்களா?

2019ம் ஆண்டிற்கான வாக்குத்தத்தப் பாடலோடு கூடிய பாடல் ACD

## கர்த்தர் உன்னுடனே! (Vol-26)

நேரில் பெற **100/-** ரூபா | தபாலில் பெற **150/-** ரூபா



எமது தலைமை மற்றும் எல்லா கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு: 98429 55006.

திருகோணமலையில்

'இயேசு விடுவிக்கிறார்'

## கெத்செமனே ஜெப மையம்!



### திறப்பின் வாசல் ஜெபம்

நாள்: **ஒவ்வொரு செவ்வாய்கிழமையும்**
**காலை 9:30 - மதியம் 2:00 மணிவரை.**

**Subamangalam Wedding Hall,**
**No:31,1st Floor,Huskisan Street,**
**Trincomalee.**

தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

*Contact: 011-2930 152.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பகுதி!

# புத்தியுள்ள ஸ்திரீ!





சிறப்புச் செய்தி:

**சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.**

**கடந்த (2018) அக்டோபர் மாத இதழில், கடைசியாக, "...அங்கு கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்காக ஜெபிப்பேன். சில சமயங்களில், கர்த்தருடைய சித்தத்தின்படி அவர் என்னை தனியாக ஊழியத்திற்காகக் கொண்டு செல்கிற இடங்களுக்குச் சென்று, பெண்கள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, குடும்பங்களை கர்த்தருக்கு நேராக வழி நடத்தும்படியாக, கர்த்தர் என்னை பயன்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் கீழ்படியும்போது, அவர் நம்மை ஆசீர்வதிப்பார்." என்பதாக வாசித்து முடித்தீர்கள் அல்லவா?**

இதோ, **அதன் தொடர்ச்சியை** வாசியுங்கள்...

எனக்கு அன்பானவர்களே, குடும்ப வாழ்க்கை நடத்துகிற நமக்கு நீடிய பொறுமை வேண்டும். கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் நமக்கு அனுமதிக்கிற **பாடுகளை நாம் சகிக்க வேண்டும்.** அதற்கான கிருபைகளை அவரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தருக்குத் தெரியாமல் நம்முடைய வாழ்க்கையில் எதுவுமே நடக்காது.

யாரிடத்திலும் போய் நான் எதையும் கேட்பதுமில்லை. கர்த்தரிடத்தில்தான் நான் கேட்பேன். இன்றைக்கு என்னை அனேகருக்கு ஆசீர்வாதமாக கர்த்தர் வைத்திருக்கிறார். இன்றைக்கு வரைக்கும் கர்த்தர் என் மீது அன்பு வைத்து நடத்துவதை நினைத்து, அவருக்கு மனதார நன்றி செலுத்துகிறேன். மற்றவர்களுக்கு நான் உதவி செய்யக் கூடிய அளவிற்கு கர்த்தர் என்னை வைத்திருக்கிறார்.

**தொற்காள்** நற்கிரியைகளைச் செய்தாள். அனேகருக்கு தான-தர்மம் பண்ணினாள். நாமும் தொற்காளைப் போல மற்றவர்களுக்கு நன்மை செய்து கர்த்தரை சந்தோஷப்படுத்த வேண்டும்.

எனக்கு அன்பானவர்களே, எல்லாக் காரியத்திலும் நாம் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளையாக இருக்கிறோமா? என்று யோசித்துப் பாருங்கள். கர்த்தர் உங்களைப் பார்த்து, "நீ எனக்குப் பிரியமான பிள்ளை!" என்று சொல்ல முடியுமா? கர்த்தரைப் பிரியப்படுத்தும்படியாக, நீங்கள் அவருக்காக ஊழியம் செய்ய வேண்டும். ஆத்துமாக்களை கர்த்தர் பக்கமாகக் கொண்டு வர வேண்டும்.

நீங்களும் தெபோராளைப் போல, ஒரு எஸ்தரைப் போல கர்த்தருக்காக எழும்புங்கள்! எத்தனையோ நோய்வாய்ப்பட்ட மக்கள் மருத்துவமனைகளில் கண்ணீருக்கு மத்தியில் இருக்கிறார்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள். மாதத்தில் ஒரு முறையாவது அவர்களைப் போய் சந்தித்து, அவர்களையும் கர்த்தருக்குள் கொண்டு வாருங்கள். நம்மைப் போல இருக்கிற மற்ற மக்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிவியுங்கள்.

உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். வயல் நிலங்கள் விளைந்திருக்கிறது! அறுவடைக்கு ஆட்கள் தேவை! நம்முடைய வாழ்க்கையில் பாடுகள் இருக்கலாம்! உபத்திரவங்கள் இருக்கலாம்! போராட்டங்கள் இருக்கலாம்! அதன் மத்தியிலும், அந்தத் தூசியை உதறி விட்டு, **கர்த்தருக்காக எழும்புங்கள்.** அதற்கு வேண்டிய பெலனையும், கிருபையையும் கர்த்தர் உங்களுக்குத் தருவார். நீங்கள் கர்த்தருக்காக ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும்.

இயேசு கிறிஸ்வினுடைய வாழ்க்கையை நாம் பார்ப்போமானால், ஆத்தும ஆதாயம் செய்வதில் அவர் நமக்கு ஒரு நல்ல 'முன்மாதிரி'யாக இருக்கிறார். அவர் இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில், ஆத்துமாக்களைத் தேடித் தேடி அலைந்தார். ஒரு சமாரியப் பெண் யாக்கோபின் கிணற்றின் அருகே தண்ணீர் எடுக்க வந்தாள். இயேசு அவளுடைய பாவ வாழ்க்கையை மாற்றுவதற்காக, அவளை இரட்சிக்கும்படியாக அந்தக் கிணற்றின் அருகே கடந்து வந்தார்.

இன்றைக்கு உங்கள் வாழ்க்கையை மாற்றும்படியாகவும், உங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையை மாற்றும்படியாகவும், கர்த்தர் உங்கள் அருகில் வந்திருக்கிறார். அன்றைக்கு ஒரு சமாரியப் பெண்ணைத் தேடி வந்த இயேசு கிறிஸ்து, இன்றைக்கு உங்களையும் தேடி வந்திருக்கிறார்.

நான் எங்கெல்லாம் ஊழியத்திற்குப் போகிறேனோ, அங்கெல்லாம் "ஒரு ஆத்துமாவைக் கூட விட்டு விடக் கூடாது." என்று எண்ணி, அங்கு வருகிற ஜனங்களுக்கெல்லாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்வேன். அனேகர் தங்களுடைய வாழ்க்கையில், 'கர்த்தர் ஒரு அற்புதத்தைச் செய்ய வேண்டுமே!' என்று எதிர்பார்த்து வருவார்கள்.

நான் அவர்களிடத்தில், "முதலாவது உங்களுடைய வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுங்கள்." என்று சொல்லி, அவர்களுக்காக ஜெபிப்பேன்.

ஒரு சமயம், திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்த ஒரு சகோதரர், தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியோடு வந்து என்னைப் பார்த்து, ஜெபித்து விட்டுப் போனார். சில மாதங்கள் கழித்து மறுபடியுமாக அவர் என்னைச் சந்தித்து, "அக்கா, சில மாதங்களுக்கு முன் என் மனைவியோடு உங்களைச் சந்தித்து ஜெபித்து விட்டுப் போனோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, என் மனைவியின் கர்ப்பத்தை ஆசீர்வதித்திருக்கிறார்." என்று சொல்லி விட்டு, சந்தோஷமாகக் கடந்து போனார்.

இயேசு கிறிஸ்து தனது சீடர்களோடு கூட கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டிற்கு வந்தார். அங்கே, நீண்ட காலமாக பிசாசு பிடித்திருந்த ஒரு மனிதனைக் கண்டார். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவனை சங்கிலியினாலும், விலங்குகளினாலும் கட்டிப் போட்டாலும், அவன் அவைகளை எல்லாம் தகர்த்துப் போட்டு விடுவான். அவனை யாராலும் அடக்க முடியாமல் இருந்தது.

அப்படிப்பட்ட ஒரு பொல்லாத ஆவி பிடித்த ஒரு மனிதனுடைய வாழ்க்கையை மாற்றும்படியாக, இயேசு கிறிஸ்து அங்கே கடந்து போனார். அவர் அவனைப் பார்த்தபோது, அவன் மேல் மனதுருகி, அந்தப் பிசாசின் கட்டில் இருந்து விடுதலையாக்கி, அந்த மனிதனுடைய ஆத்துமாவை ஆதாயப்படுத்தினார். (மாற்கு 5:1-13).

பிசாசின் பிடியில் இருக்கிற மக்களை நாமும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விடுதலையாக்கி, அவர்களை திருச்சபைக்குள் கொண்டு வர வேண்டும். "கர்த்தர் என்னைக் கொண்டும் விடுதலையைக் கொடுப்பாரா?" என்று நீங்கள் நினைக்கலாம். அப்படியல்ல! கர்த்தர் உங்களையும் பயன்படுத்த சித்தம் உள்ளவராகவே இருக்கிறார். ஆத்தும ஆதாயத்தில் பெண்களுடைய பணி மிக மிக முக்கியம். நீங்களும் ஆத்தும ஆதாயம் செய்யலாம்.

நாம் ஆத்தும ஆதாயம் செய்கிறோமா? ஆகவே, நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்காக எழும்ப வேண்டும்.

அதே சமயத்தில், உங்களுடைய குடும்பக் காரியங்களையும் சரியாகக் கவனிக்க வேண்டும். குடும்பத்திற்கான காரியங்களை எல்லாம் செய்து முடித்து விட்டு, ஞானமாக கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும்.

"கர்த்தர் நம்மைப் பார்க்கிறார்!" என்கிற உணர்வு நமக்குள் எப்போதும் இருக்க வேண்டும். நமக்கு அனேகக் குடும்பப் பொறுப்புகள் உண்டு. எதையும் ஞானத்தோடு செய்ய வேண்டும். ஞானத்தோடு பேச வேண்டும். குடும்பத்தைக் கர்த்தருக்குள் கட்டி எழுப்ப வேண்டும். "எல்லாவற்றையும் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்..." என்று கணவரிடம் சொல்லி விட்டு, பொறுப்புகளை அல்லல் தட்டக் கூடாது. நாம் சாட்சியான வாழ்க்கை வாழ வேண்டும்.

**"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."** (தானியேல் 12:3) என்பதாக கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

கிறிஸ்தவ இந்தியப் பெண்களில் பண்டிதை ரமாபாய் அவர்கள் (1858-1922), மிகச் சிறந்த பெண்ணுரிமைப் போராளியாக விளங்கினார்கள். ரமாபாய் அவர்கள் 1858 ஏப்ரல் 23ம் தேதியன்று, கர்நாடகா மாநிலம்-'கங்காமுல்' என்கிற இடத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்கள். தன்னுடைய 16வது வயதில், தன் பெற்றோரை இழந்தார்கள்.



தன்னுடைய 22வது வயதில் திருமணம் செய்து, ஒரு பெண் குழந்தை பிறந்த நிலையில், 2 ஆண்டுகளுக்குள் காலரா நோயால் பாதிக்கப்பட்டு, தன் கணவரை இழந்து விதவையானார்கள். ரமாபாய் அவர்கள், ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்து, பின்னாளில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறிய ஒரு சமூக சீர்திருத்தவாதி ஆவார்கள். குழந்தைத் திருமணங்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து, விதவைகள் மறுமணம் உள்ளிட்ட பெண்களின் பல உரிமைகளுக்காகப் போராடினார்கள்.

மட்டுமல்ல, விதவைகளுக்காக, 'சாரதா சதன்' என்கிற அமைப்பை மும்பையில் உருவாக்கி, கிறிஸ்தவ மார்க்கத்தை பற்றிய பிரச்சாரத்தை முடுக்கி விட்டார்கள். இதனால் ரமாபாய் அவர்களுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. பரிசுத்த வேதாகமத்தை மராத்தி மொழியில் மொழி பெயர்க்கும் பணியிலும் ஈடுபட்டார்கள்.

தன் தனிப்பட்ட வாழ்க்கையில், எத்தனையோ பாடுகள், வேதனைகள், போராட்டங்கள், சமுதாயப் பிரச்சனைகள் மத்தியிலும், தன்னை இரட்சித்த இயேசு கிறிஸ்துவுக்காக பல விதங்களில் ஊழியம் செய்தார்கள்.

அயர்லாந்து தேசத்தில் பிறந்த எமி கார்மைக்கேல் அம்மையார் அவர்கள், தமிழ்நாட்டிற்கு ஒரு மிஷனெரியாக வந்து, 'டோனாவூர்' என்கிற ஊரில் 55 வருடங்கள் அருந் தொண்டு ஆற்றினார்கள். அந்நாட்களில் இருந்த 'தேவதாசி!' முறையை ஒழிக்கப் பாடுபட்டார்கள். எங்கோ பிறந்து வளர்ந்த அவர்களால், எங்கோ ஒரு தேசத்திலுள்ள மக்களை நேசித்து, தன் வாழ்க்கையையே தியாகம் செய்து, அந்த மக்களுக்காக எப்படி தொண்டாற்ற முடிந்தது? ஒரே ஒரு காரியம்தான்! அவர்களை ஆட்கொண்ட கிறிஸ்து இயேசுவினுடைய மனதுருக்கம்! அன்பு!

"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."
தானியேல் 12:3.

- தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு - திறப்பின் வாசல் ஜெபத்தில்



# தயை செய்த ஆண்டவர் இயேசு!

2019ம் ஆண்டின் முதலாவது திறப்பின் வாசல் ஜெபம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



சகோ. ராகவன்

ஜனவரி 5ம் தேதி **காலி வீதியில் உள்ள கிறிஸ்து நாதர் ஆலய மண்டபத்தில்** நடைபெற்ற இந்த திறப்பின் வாசல் ஜெபத்தில் சுமார் 360 தேவப்பிள்ளைகளும் 12 போதகர்களும் கலந்து கொண்டு ஜெபித்தனர்.

சகோ. **ராகவன்** குழுவினர் பாடல் ஆராதனை வேளைகளை நடத்த சகோ. **குமார்** அவர்கள் தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும் பிரார்த்தனைகளை நடத்தி வந்திருந்த மக்களும் ஜெபங்களை ஏறெடுக்க வைத்தார்கள்.



சகோ. குமார்

**சகோ. சாமுவேல் மோகன்ராஜ்** *(Showers of Blessing Ministries)* அவர்கள் வல்லமையான கர்த்தருடைய வார்த்தைகளை அறிவித்து ஜெபங்கள் ஏறெடுத்தார்கள். **"சீயோனுக்காக தேவன் தயை செய்ய குறித்த காலமும் வேளையும் வந்தது"** என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட செய்தி வந்திருந்த மக்களை தேவனுடைய உன்னதமான ஆசீர்வாதங்களுக்கும் நன்மைகளுக்கும் நேராக வழிநடத்தியது.



சகோ. சாமுவேல் மோகன்ராஜ்

முன்னதாக இந்த திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு அற்புதம் பெற்றவர்கள் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். கர்த்தர் வந்திருந்த ஒவ்வொருவரையும் அபரிமிதமாக ஆசீர்வதித்து தமது நாமத்தை மகிமைப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பின் வாசல் ஜெபத்தில் இயேசு கிறிஸ்து செய்து வருகிற அற்புதங்களில் சில...

### ஜெபத்தை கேட்டார்!



என்னுடைய மகனுக்கு ஒரு சத்திரசிகிச்சை செய்யப்பட்டு மிகவும் சுகவீனமாக காணப்பட்டார்.

அத்தோடு அவருக்கு ஏற்ற **வேலை வாய்ப்பும் இல்லாதிருந்தது**. அந்த வேளையில் நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்து ஜெபம் செய்தேன்.

தேவன் பூரண சுகத்தை அருளியதோடு **எல்.ஓ.சீ வங்கியில் நல்லதொரு வேலை** வாய்ப்பையும் ஏற்படுத்தி கொடுத்தார். – **இந்திரா**, வத்தளை.

### பூரண சுகத்தைக் கொடுத்தார்!



எங்களுடைய சபைப் போதகர் ரிச்சர்ட் அவர்கள் **மாரடைப்பு** காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு விண்ணப்பம் எழுதிக் கொடுத்து ஜெபம் செய்தேன். தேவன் தாமே **பூரண சுகத்தை அருளி** மீண்டும் ஊழியங்களை நிறைவேற்ற கிருபை செய்திருக்கிறார்.

அத்தோடு என்னுடைய பேரன் **ஜோயல் அடிக்கடி வலிப்பு வியாதியினால்** பாதிக்கப்பட்டிருந்தாள். அதற்காகவும் திறப்பின் வாசல் ஜெபத்தில் வேண்டுதல் செய்தேன். அவன் விடுதலை பெற்று **பூரண சுகத்து**டனிருக்க தேவன் கிருபை செய்தார். – **ரூத்**, மத்துகம.

### பணத் தேவையை சந்தித்தார்!



கடந்த டிசம்பர் மாதம் நான் தொழிலுக்காக ஒரு நிதி நிறுவனத்தில் **பண உதவிக்காக** விண்ணப்பித்திருந்தேன். அதைப் பெற்றுக் கொள்ள அனேக இடர்பாடுகள் இருந்த போதிலும் கடந்த திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு விண்ணப்பம் எழுதிக் கொடுத்து ஜெபம் செய்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு அந்த **பண உதவியைப் பெற்றுக் கொள்ளவும்**, எனது மகளின் கல்விக்குத் தேவையான சகல உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்து கல்வியை சிறப்பாக கற்க கிருபை செய்தார்.

– **ரஞ்ஜித்குமார்**, கொழும்பு.

## கொழும்பில்

இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2019

**மார்ச் 2**

(சனிக்கிழமை)

நேரம்: **காலை 9:00 - மதியம் 2:00.**

இடம்:

**Christ Church Hall, Galle Face,**

**(Near the Ramada Hotel.)**

தேவ செய்தியும், ஜெபமும்:

**'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்.**

தேசத்திற்காக ஜெபிக்கவும், ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. Ph: 011-2930 152.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயம் பெற்றவர்கள்!



பிரியமானவர்களே, 'ஜெயம் பெற்றவர்கள்!' என்கிற இந்தப் பகுதியின் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்! இதன் மூலமாக அனேகர் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார்!

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ஜெயம் பெற வேண்டும்! நீங்கள் உயர்த்தப்பட வேண்டும்! நீங்கள் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்! என்பதுதான் அவருடைய விருப்பம்.

இம்மாதத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம்–'மணிமங்கலம்' என்கிற இடத்தைச் சேர்ந்த, சகோ. மகேஷ்குமார் என்பவரை கர்த்தர் எப்படி இரட்சித்து, ஆசீர்வாதமாக நடத்தி வருகிறார் என்பதை, ஒரு சாட்சியாக இங்கே உங்களுக்காக பிரசுரித்திருக்கிறோம். நீங்களும் வாசித்து, கர்த்தரை விசுவாசித்து, தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## தொழிலாளியாக இருந்தேன்! முதலாளியாக மாற்றினார்!

நாங்கள் வைராக்கியமான ஒரு '**இந்து**'க் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கென்று பரம்பரையாக, 'குடும்பக் கோயில்' என்று ஒன்று இருந்தது. அதற்குரிய பூஜைப் பொருட்களை எல்லாம் எங்கள் வீட்டிலிருந்துதான் தர்ம கர்த்தாக்கள் எடுத்துக் கொண்டு போவார்கள். அந்தக் கோயிலுக்கு எங்கள் குடும்பம்தான் தலையாக இருந்தது. என் தாயார் 'குறி' சொல்வார்கள்.



என்னுடைய ஒரே சகோதரி, சுமார் 2½ **வருடங்களாக** பயங்கரமான **அசுத்த ஆவியின் போராட்டத்தினால்** மிகவும் பாதிக்கப்பட்டாள். அந்த ஆவி அவளை அலைக்கழிக்கும்போது, கொஞ்சம் தண்ணீர் குடித்தால் கூட, உடனே வாந்தி எடுத்து விடுவாள். அவளுடைய **கண்கள், உதடுகள் எல்லாம் நீல நிறமாக** மாறி விடும்! வேறு எந்த விதமான செயல்பாடுகளும் இருக்காது! அவளுடைய விடுதலைக்காக எத்தனையோ 'கோயில்!', 'குளம்!' என்று அலைந்து திரிந்து, எத்தனையோ **சாமியார்களையும், மந்திரவாதி**களையும் போய் பார்த்தோம்.

'அவளுக்கு எப்படியாவது ஒரு விடுதலை கிடைத்து விட வேண்டும்?' என்று, யார் யாரெல்லாம் எந்தெந்த இடங்களுக்கு எல்லாம் போகச் சொன்னார்களோ, கண் மூடித்தனமாக அங்கங்கெல்லாம் சென்று, எவ்வளவோ பணத்தைச் செலவழித்து, எத்தனையோ பரிகாரங்களைச் செய்து பார்த்தும், அவளுக்கு ஒரு நிரந்தரமான விடுதலை கிடைக்கவே இல்லை.

ஆகவே எனக்கும், என் தாயாருக்கும் **தாங்க முடியாத துக்கம்** இருந்தது. கிறிஸ்தவ தேவாலயம் தவிர, மற்ற எல்லா இடங்களுக்கும் அவளைக் கொண்டு போய் பார்த்தோம்.

2½ வருடங்களாக நான் தேடாத தெய்வங்கள் இல்லை! நான் போகாத கோயில்கள் இல்லை! ஆனால், கிறிஸ்தவ ஆலயத்திற்குப் போவதற்கு மாத்திரம் என் மனதிற்கு எப்படியோ இருந்தது. "என் சகோதரிக்கு சுகம் கிடைத்தால் போதும்!" என்கிற ஒரே ஒரு எண்ணம்தான் என் உள்ளத்தில் இருந்தது.

கடைசியாக நாங்கள் அவளை ஒரு மந்திரவாதியினிடத்தில் கூட்டிக் கொண்டு போயிருந்தபோது, "இது மரணத் தருவாயில் இருக்கிறது. காப்பாற்றுவது ரொம்பக் கஷ்டம்தான். ஆனாலும் ஒரு லட்சம் கொடுத்தால், இவளை சுகப்படுத்தி விடுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 வருடங்கள் உங்களுக்கு உத்தரவாதம் கொடுக்கிறேன்!" என்று சொன்னார்.

அப்பொழுது என்னுடைய 'இந்து' நண்பர் ஒருவர் தொலைபேசி மூலமாக என்னோடு தொடர்பு கொண்டு, "எனக்குத் தெரிந்த கிறிஸ்தவப் போதகர் ஒருவர் இருக்கிறார். அவர் மூலமாக உங்கள் சகோதரிக்கு விடுதலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது." என்று சொன்னார். அந்த நேரத்தில் கூட ஆலயத்திற்குள் போவதற்கு எனக்கு மனமில்லாமல்தான் இருந்தது.

அப்பொழுது நான், 'எப்படியாவது நம்முடைய சகோதரிக்கு சுகமானால் சரி!' என்று எண்ணி, அவரிடத்தில், "அந்த மந்திரவாதி 100 வருடங்கள் எந்தப் பிரச்சனையும் இருக்காது!' என்று உத்திரவாதம் கொடுக்கிறார். ஆகவே அவர் கேட்கிற ஒரு லட்சம் ரூபாயைக் கொடுத்து, அவளை சுகப்படுத்தி விட வேண்டியதுதான்." என்று சொன்னேன்.

அதற்கு என் நண்பர், "இனியும் பைத்தியக்காரத்தனமாக பணத்தைச் செலவழிக்கக் கூடாது. இதுவரை நாம் மந்திரவாதிகளை நம்பிப் போனதெல்லாம் போதும். இந்த முறை அந்தப் போதகரிடம் கூட்டிக் கொண்டு போவோம். அவருக்கு ஒரு பைசா கூட கொடுக்க வேண்டியதில்லை." என்றார்.

நாங்கள் அந்தப் போதகரைத் தொடர்பு கொண்டு, என் சகோதரியை அந்த ஆலயத்திற்குக் கூட்டிக் கொண்டு போனேன். ஒரு பைசா கூட செலவு இல்லாமல், அவருடைய ஜெபத்தினால், என் **சகோதரிக்கு பூரண விடுதலை** கிடைத்து விட்டது. அந்த சம்பவத்திற்குப் பிறகுதான் கிறிஸ்தவத்தின் மீது எனக்கு ஒரு நம்பிக்கையே வந்தது. "அவர்கள் செய்கிற **ஜெபத்தில்** ஏதோ ஒரு **வல்லமை இருக்கிறது!"** என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

அதன் பிறகு ஒவ்வொரு வாரமும் நான் ஆலய ஆராதனைக்குப் போகும் போதெல்லாம், ஆலயத்தின் பின்பாகத்தான் உட்கார்ந்திருப்பேன். அங்கு சொல்லப்படுகிற காரியங்கள் எல்லாம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் பிறகு நாங்கள் கர்த்தரை உறுதியாகப் பிடிக்க ஆரம்பித்தோம். இன்றைக்கு என் சகோதரிக்குத் திருமணமாகி, 2 குழந்தைகளுக்குத் தாயாக இருக்கிறாள்.

என் சகோதரிக்கு கர்த்தர் விடுதலை கொடுத்ததின் நிமித்தமாக, கடந்த 2008ம் ஆண்டு, **நானும், என் தாயாரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோம்.**

அந்த சமயத்தில் நான் +2 படித்து முடித்து விட்டு, ஒரு எலக்ட்ரீஷியனாக **தினக் கூலியாக** வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடைய சம்பளம் ₹ 2,400/–தான். தினந்தோறும் இரவு மிகவும் பிந்தித்தான் வீட்டிற்குப் போவேன். வேலையும் மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. எங்கள் குடும்பம் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையில் இருந்தது.

பிறகு ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் ₹ 6,000/- சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்ந்தேன். என்றாலும், அன்றைய சூழ்நிலையில், "இதைவிட அதிகம் சம்பளம் கொடுக்கிற கம்பெனியில் வேலை பார்க்க வேண்டும்." என்கிற ஒரு எண்ணத்தோடுதான் இருந்தேன்.

2009ல் ஒருநாள், நான் ஞாயிறு ஆலய ஆராதனைக்குப் போன இடத்தில், என்னுடைய நெருங்கிய நண்பர்களில் சிலர், "நாங்கள் நாலுமாவடியில் நடக்க இருக்கிற வியாபாரிகளுக்கான ஆசீர்வாத உபவாச ஜெபத்திற்குப் போகப் போகிறோம். நீங்களும் எங்களோடு வாருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்." என்று சொல்லி, என்னை அழைத்தார்கள்.

அப்பொழுது என் உள்ளத்திற்குள், "அந்த உபவாச ஜெபக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட வேண்டும்." என்கிற ஒரு ஆசை ஒரு பக்கம் இருந்தாலும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, "கர்த்தரைத் தேட வேண்டும். அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்." என்கிற ஒரு வாஞ்சையும் இருந்தது.

அந்த சமயத்தில் நான் தொழில் செய்யவும் இல்லை. தொழில் செய்வதற்கான எந்த ஒரு எண்ணமும் எனக்குக் கிடையாது. "நான் இப்பொழுது வாங்குகிற சம்பளத்தை விட, நல்ல சம்பளம் தருகிற வேறொரு கம்பெனிக்குத்தான் போக வேண்டும்." என்கிற ஒரு எண்ணம்தான் எனக்குள் இருந்தது.

அந்த வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் நான் கலந்து கொண்டபோது, **நமது சகோதரர்** அவர்களும், சகோ. **A. அப்பாத்துரை** அவர்களும் அனேக ஆலோசனைகளைக் கொடுத்து ஜெபித்தார்கள். கடைசி ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள், "இந்த வருடம், **நீங்கள் ஒரு தொழிலாளியாக இந்த ஜெபத்திற்கு வந்திருந்தால், அடுத்த வருடம் நீங்கள் ஒரு முதலாளியாக வரும்படியாக கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்."** என்று தீர்க்கதரிசனமாக ஒரு வார்த்தையைச் சொன்னார்கள்.

அப்பொழுது என்னோடு கூட வந்திருந்த என் நண்பர்கள், "இந்த தீர்க்கதரிசன வார்த்தை உங்களுக்குத்தான்!" என்றார்கள். ஆனாலும் கூட, "எனக்கும் வியாபாரத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இந்த சூழ்நிலையில் நாம் எப்படி ஒரு முதலாளியாக மாறப் போகிறோம்?" என்கிற ஒரு எண்ணம்தான் எனக்குள் இருந்தது. நமது சகோதரர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தையில் எனக்கு நம்பிக்கை இல்லாமல்தான் இருந்தது.

இந்த சூழ்நிலையில், நான் வேலை செய்து கொண்டிருந்த அலுவலகத்தில், என்னை வேலையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று, அங்குள்ளவர்கள் எனக்கு விரோதமாக சூழ்ச்சி செய்து, யாரோ செய்த ஒரு கொலைப் பழியை என் மீது சுமத்தி விட்டார்கள்.

அந்தப் பிரச்சனையை செய்தித்தாளில் ஆவணம் செய்து, எனக்கு எதிராக ஒருவரை சாட்சி சொல்லவும் வைத்து, சி.பி.சி.ஐ.டி. அலுவலகம் வரை கொண்டு போய் விட்டார்கள். என்னை காவல்துறையினர் தேடிக் கொண்டிருந்தார்கள். என்னைச் சுற்றி இவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருந்த போதும் கூட, அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாமல், வழக்கம் போல தினந்தோறும் நான் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில், "அந்தக் கொலைக்கும், உங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை." என்று சொல்லும்படியாக, கர்த்தர் காரியத்தை மாற்றி அமைத்து, **அந்தப் பிரச்சனையில் இருந்து என்னை விடுவித்தார்.**

அப்பொழுது, "எனக்கு துரோகம் செய்தவர்களுக்கு முன்பாக நாம் வாழ்ந்து காட்ட வேண்டும்." என்கிற ஒரு வைராக்கியம் எனக்குள் உண்டானது. ஆனாலும், "அவர்களுக்கு முன்பாக வாழக் கூடாது. வேறு எங்கேயாவது போய் நல்ல வேலை செய்து வாழ வேண்டும்." என்று நினைத்து, அதற்காக என் ஜெப நண்பர்களோடு இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தேன்.

அப்பொழுது, "நீ எந்த இடத்தில் வெட்கப்பட்டு நின்றாயோ, அதே இடத்தில் நான் உன்னை உயர்த்தி ஆசீர்வதிப்பேன்!" என்று கர்த்தர் தீர்க்கதரிசனமாக எனக்கு வாக்குக் கொடுத்தார். என் நண்பர்கள் கூட, "உங்களுக்கு விரோதமாக எழும்பிய மக்களுக்கு மத்தியில், நீங்கள் அதே தொழில் செய்து ஆசீர்வதிக்கப்பட்டு, உயர்ந்திருக்க வேண்டும்." என்று சொன்னார்கள். மறுபடியும் நாங்கள் உபவாசம் இருந்து ஜெபம் பண்ணினோம்.

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, நான் வெட்கப்பட்டு நின்ற அதே இடத்தில், கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையின்படியே, அடுத்த வியாபாரிகள் கூட்டத்தில் நான் கலந்து கொள்வதற்கு முன்பாகவே, **கர்த்தர் என்னை ஒரு முதலாளியாக மாற்றி விட்டார்!**

ஒரு காலத்தில் வெறும் சம்பளத்திற்கு தினக் கூலியாக வேலை பார்த்துக் கொண்டிருந்த என்னை கர்த்தர் ஆசீர்வதித்து, இன்றைக்கு சொந்தமாக, 'Driving School' வைத்து தொழில் செய்கிற அளவிற்கு உயர்த்தி இருக்கிறார். தற்போது என்னிடத்தில் 4 பேர் வேலை செய்கிறார்கள். மாதந்தோறும் ₹ **40,000க்கும் மேல் சம்பளம்** கொடுக்கும்படியாக கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருக்கிறார்.

இன்றைக்கு என்னுடைய Driving Schoolல் **5 கார்கள் இருக்கிறது. 2 இடங்களில் அலுவலகம்** இருக்கிறது. இப்பொழுது நான் மாதத்திற்கு ₹ 50 ஆயிரத்திலிருந்து, ₹ **60 ஆயிரம் வரை சம்பாதிக்க** கர்த்தர் எனக்குக் கிருபை செய்து வருகிறார்.

ஒரு சாதாரண தொழிலாளியாக இருந்த என்னை, ஒரு வருடத்திற்குள்ளாக ஒரு முதலாளியாக மாற்றி, அடுத்த (2010) வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள, கர்த்தர் கிருபை செய்தார்.

அன்றைய தினம், நமது சகோதரர் அவர்கள், **நல்ல சமாரியன் சங்கம்!'** (GOOD SAMARITAN CLUB) குறித்து அறிமுகப்படுத்தினார்கள்.

என் சிறு வயதிலிருந்தே, "ஏழைகளுக்கு எதாவது உதவி செய்ய வேண்டும்." என்கிற ஒரு எண்ணம் எனக்குள் இருந்தது. கிறிஸ்துவுக்குள் வந்த பிறகுதான், "இயேசு கிறிஸ்து எப்படிப்பட்டவர்?" என்பதை எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டும். ஏழை, எளிய மக்களுக்கு தான-தர்மங்களைச் செய்ய வேண்டும். 'நாம் கிறிஸ்தவர்கள்!' என்கிற முறையில், தேவையுள்ள மக்களுக்கு உதவி செய்தால், கிறிஸ்துவின் அன்பை அவர்கள் ருசிப்பார்கள்!" என்று எனக்குள் ஒரு ஏவுதல் இருந்தது.

ஆகவே, கடந்த 2010ம் வருடத்தில், என்னுடைய 4 ஜெப நண்பர்களோடு சேர்ந்து 2 கிராமங்களைப் பொறுப்பெடுத்து, வாரத்திற்கு 2 நாட்கள் அந்தக் கிராமங்களுக்கு குடும்பமாகப் போய் **கிராம ஊழியம் செய்து வருகிறோம்.**

**இப்படியாக, ஒரு தொழிலாளியாக இருந்த என்னை, ஒரு முதலாளியாக மாற்றிய கர்த்தருக்கு ஊழியம் செய்து வருகிறபடியினால், அவர் என்னை அபரிமிதமாக ஆசீர்வதித்து வருகிறார்.** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!


## கிளிநொச்சி

முகவரி: **இல. 31, உதயநகர் கிழக்கு, நாகதம்பிரான் கோவில் வீதி, கிளிநொச்சி.**
**Ph: 021 - 2285 284.**

அலுவலக நேரம்
தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.

இயேசு விடுவிக்கிறார்

கெத்செமனே ஜெப மையம்
GETHSEMANE PRAYER CENTRE

## இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!** (புதன்கிழமைதோறும்) **12:00 P.M. - 3:00 P.M.**

**உபவாச ஜெபம்!** (சனிக்கிழமைதோறும்) **9:00 A.M. - 12:00 Noon**

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்! (ஞாயிற்றுக்கிழமைதோறும்) **3:00 P.M. - 4:00 P.M.**

**அற்புத விடுதலை பிரார்த்தனை!** (ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை) **5:00 P.M. - 7:00 P.M.**

**முழு இரவு ஜெபம்** (போயா நாளின் முந்தைய தினம்) **இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.**

**இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

வத்தளையில்

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

| பெண்கள் ஜெபம்! | உபவாச ஜெபம்! | குடும்ப ஆசீர்வாத கூடுகை! |
|---|---|---|
| (வியாழக்கிழமைதோறும்) | (சனிக்கிழமைதோறும்) | (ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று) |
| 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. |

சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் தேவ செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

உங்கள் அவசர **ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை - **கல்முனையில்**

# நம்பிக்கை பெருவிழா! 2019

நாள்: 2019 **ஏப்ரல் 19, 20, 21**

நேரம்: மாலை **5:00** - இரவு **9:00**



தேவ செய்தியாளர்கள்:

சகோ. **மோகன் சி. லாசரஸ்,**

சகோ. **ஜாண் பாலக்குமார்.**

பாவ சாப வியாதி மற்றும் பிசாசின் கட்டுகளிலிருந்து
**விடுதலையை பெற்று கொள்ள வாருங்கள்!**

தொடர்புக்கு:0772 850105,0112 930152,0714 371111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



### ஏஞ்சல் டி.வியில்

சனிக் கிழமைதோறும் (காலை 7:30 - 8:00) -

**'குடும்ப ஆசீர்வாத நேரம்!'**

ஞாயிறுதோறும் (காலை 7:30- 8:00) -

**'உங்கள் அற்புதத்தின் நேரம்!'**

**சுவர்க டி.வியில்**

ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல...

ஞாயிறு முதல் வெள்ளி வரை

காலை 7:30 - 8:00 மணிவரை.

**Dialog TVயில்**

*(God Channel)*

ஞாயிறு முதல் வெள்ளி வரை

காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின்

தேவ செய்திகளைக் கேட்டு,

*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA.
Registered in the Department of Posts of Sri Lanka under QD/122/News/2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org